ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை
அருளிச்செய்த

ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யானம்

श्रीमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे ।
यत्कटाक्षैकलक्ष्याणां सुलभः श्रीधरस्सदा ॥

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே ।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப4: ஸ்ரீத4ரஸ் ஸதா3 ॥

அவதாரிகை:— 'ஜிதந்தே'யாவது ருக்3வேத3கி2லம்; தத்வப்ரதிபாத3கபரமான ஸ்ரீ புருஷஸூக்தம் ஸர்வஶ்ருதிகளிலும் ஓதிப்போருமாபோலே, இதுவும் ஸ்ரீ ஶாஸ்த்ரத்திலும், இதிஹாஸ புராணங்களிலேயும் மஹாமந்த்ரமென்று திருமந்த்ரத்தோபாதி பரமரஹஸ்யமாகச் சொல்லிப்போருமதொன்று. வேத3ாக்ஷரராஶியைப் பௌருஷேயமான இதிஹாஸபுராணங்களிலே எழுதிப்படித்துப் போருவானென்னென்னில்: கி2லமாகிறது அப்ரஹதம் ஸ்த2ாநம்; ஸூத்ரகாரர்கள் கி2லஸஹிதமாகத் தாங்கள் அத்4யயனம் பண்ணிப் போந்தவர்களாகையாலே ஸ்மார்த்தவித4ாநங்களிலே, மந்த்ரமாக விநியோகி3த்துப் போராநின்றார்களிறே. இப்படி இதிஹாஸபுராணங்களிலே, ஸ்ரீ ஶாஸ்த்ரத்திலே 1. **"जितन्त इति मन्त्रेण"** (ஜிதந்த இதி மந்த்ரேண) என்று மந்த்ரமாக விநியோகி3த்துப் போருமதொன்று.

ஶ்வேதத்3வீபவாஸிகள் க்ஷீராப்3தி4 நாத2னுடைய ஸௌந்த3ர்யாதி3களிலே தோற்று ஈடுபட்டுச் சொல்லும் ஸ்தோத்ரம்; இதுக்கு ஸ்தோத்ரத்வமும் ஸ்தவப்ரியனுக்கு ப்ரியதமத்வமாகை. ப்3ரஹ்மாதி3களுக்கு து3ஷ்ப்ராபமான ஸ்த2லத்திலே தோன்றின இது இதிஹாஸபுராணங்களிலே

எழுதிப்படிக்கும்படி ஸுலபமானபடி என்னென்னில்: இம் மந்த்ரத்துக்கு ப்ரதிபாத்யனான க்ஷீராப்திநாதனைத் திருவடித்தொழ ஆதரித்து ஸ்ரீநாரதபகவான் ஶ்வேதத்வீபத்திலே சென்றவளவிலே, ஏகத த்வித த்ரிதர்கள் தபஸ் பண்ணிக்கொண்டிருக்க, 'இவர்களுக்கும் கிட்டவொண்ணாத விஷயத்தை நம்மால் காணமுடியாது' என்று மீண்டு, அவர்களைக் குறித்து "எனக்குச் செய்ய அடுப்பதென்?" என்று கேட்க, "இத்திருமாளிகைக்குள்ளே ஶ்வேதத்வீப வாஸிகள் க்ஷீராப்திநாதனைக்கண்டு பண்ணும் ஸ்தோத்ரம், நெடுநாளே நாங்கள் தபஸ் பண்ணுகிறோமாகையால் ஜ்ஞாத(வ்ய)மாயிற்று; எங்கள்பக்கல் இத்தை லபித்து அனுஸந்தி" என்ன, அவனும் அவர்கள் பக்கலிலே ஜிதந்தே ஸ்தோத்ரத்தை லபித்துப்போராநிற்க, ஜயந்தம் என்கிற பர்வதத்திலே பகவதுபாஸனம் பண்ணுகிற ப்ரஹ்மாவை வந்து அனுவர்த்தித்து, பிறந்த வ்ருத்தாந்தத்தை அவனுக்கு விஜ்ஞாபிக்க, "எனக்கு அந்த ஸ்தோத்ரத்தைச் சொல்" என்று ஸ்ரீநாரதபகவான்பக்கலிலே க்ரஹித்தான் குடும்பி. அவன்பக்கலிலே புக்கதாகையாலே இதிஹாஸபுராணங்களிலே எழுதப்பட்டு பகவத்பரராயிருப்பார் எல்லார்க்கும் லபிக்கும்படி ஸுலபமாயிற்று. இது ஜிதந்தேயினுடைய அவதாரம்.

இதுதன்னுடைய உள்வாயை அனுஸந்தித்தால் ப்ரபத்திக்கு வ்யாக்யானமாயிருக்கிறது; ப்ராப்யப்ராபகங்கள் இரண்டையும் சொல்லுகிறது. "ப்ரபத்திக்கு அதிகாரிகள் அஜ்ஞரும், ஸர்வஜ்ஞரும் பக்திபரவஶரும் என்று த்ரிவிதர்" என்று பட்டர் அருளிச்செய்தாரிறே. 2. "**अविद्यातो देवे परिबृढतया वा विदितया, स्वभक्तेर्भूम्ना वा जगति गतिमन्यामविदुषाम् । गतिर्गम्यश्चासौ हरिरिति जितन्ताह्वयमनोः, रहस्यं व्याजह्रे स खलु भगवान् शौनकमुनिः॥**" (அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா, ஸ்வபக்தேர் பூம்நா வா ஜகதி கதிமந்யாமவிதுஷாம் । கதிர் கம்யஶ்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ:, ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ கலு பகவாந்

ஶௌனகமுநி:||)—அஜ்ஞனுகிறுன்,— ப₄க₃வல்லாப₄த்துக்குத் தன் பக்கலிலே ஜ்ஞானஶக்த்யாதி₃கள் இல்லாதவன். ஸர்வஜ்ஞனுகிறுன்,— "தே₃ஶகாலவஸ்துக்களாலே பரிச்சே₂தி₃க்கவொண்ணுத வைப₄வத்தையுடையவன் ஈஶ்வரன்" என்றிருக்கையாலே, அஙங்யஸாத்₄யனென்று இருக்குமவன். ப₄க்திபரவஶனுகிறுன்,— ஜ்ஞாநஶக்த்யாதி₃கள் உண்டாயிருக்கச்செய்தேயும் அடைவுபட அனுஷ்டி₂க்க மாட்டாதவன். இவர்கள் மூவரும் ப₄க₃வத்₃விஷயமொழிய வேறு உபாயம் உண்டென்று அறியாதவர்கள். "'இவர்களுக்கு ப்ராபகனுமாய், ப்ராப்யனுமாய் இருக்கும் ஸர்வேஶ்வரன்' என்று, 'ஜிதந்தே' என்று பேரை உடைத்தான மந்த்ரரஹஸ்யத்தை ஸர்வஜ்ஞனை ஶௌனகப₄க₃வான் வ்யாக்₂யானம் பண்ணப் பெறுவதே!" என்கிருர். 3. "**स्वत्वमात्मनि सञ्जातं**" (ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம்) என்றும், 4. "**आत्मदास्यं हरेः स्वाम्यं स्वभावं च**" (ஆத்மதா₃ஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வப₄ாவஞ்ச) என்றும் சொல்லுகிறபடியே, த்₃வயத்துக்கு அதி₄காரியாவான், ஈஶ்வரனுக்கே அநங்யார்ஹஶேஷபூ₄தனுவானிறே. இப்படிப்பட்ட ஶேஷத்வத்தை உடைய இவ்வாத்மாக்கள், அநாதி₃யான ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄த்தாலே அறியாதே, ஈஶ்வரனுடைய ஸ்வாமித்வ ஸ்வாதந்த்ர்யங்களைத் தங்கள் தலையிலே ஏறிட்டுக்கொண்டு ஆத்மாபஹாரிகளாய் வர்த்திப்பார்கள். ஆத்மாபஹாரமாவது, — அஹங்காரமமகாரங்கள்; 5. "**द्व्यक्षरस्तु भवेन्मृत्युः**" (த்₃வ்யக்ஷரஸ்து ப₄வேந்ம்ருத்யு:) என்றும், 5. "**ममेति द्व्यक्षरो मृत्युः**" (மமேதி த்₃வ்யக்ஷரோ ம்ருத்யு:) என்றும் சொல்லுகிறபடியே. ª "யானே என்னை அறியகிலாதே யானே என்றனதே என்றிருந்தேன்" என்றிறே அபி₄யுக்தர் வார்த்தையும். பாபங்களிலே தலையான பாபமும் இவ்வாத்மாபஹாரமே; 6. "**योऽन्यथा सन्तमात्मानं**" (யோऽங்யதா₂ ஸந்தமாத்மாநம்) இத்யாதி₃களிலே ஸ்பு₂டம். பாபத்துக்கு ப்ராயஶ்சித்தம் — இவ்வாத்மா ப₄க₃வச்சே₂ஷமென்றால்

ª திருவாய் 2-9-9.

விவாத₃ம் பண்ணுதிருக்கை. 7. "तेन चेदविवादस्ते" (தேந சேத₃விவாத₃ஸ்தே) என்றும், a "உம்முயிர் வீடுடையானிடை வீடுசெய்ம்மினே" என்றும், 8. "क्षेत्रज्ञस्येश्वरज्ञानाद्विशुद्धिः परमा मता" (க்ஷேத்ரஜ்ஞஸ்யேஶ்வரஜ்ஞாநாத் விஶுத்₃தி₄: பரமா மதா) என்றும் சொல்லக்கடவதிறே. ஈஶ்வரன், இப்படி அஹங்காரமமகாரக்₃ரஸ்தராய், ஶப்₃த₃ாதி₃விஷயப்ரவணராய், அதிலே, 9. "परमेश्वरसंज्ञोऽज्ञ! किमन्यो मय्यवस्थिते" (பரமேஶ்வரஸம்ஜ்ஞோऽஜ்ஞ! கிமந்யோ மய்யவஸ்தி₂தே) என்றும், 10. "द्विधा भज्येयमप्येवं न नमेयं तु कस्यचित्" (த்₃விதா₄ ப₄ஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்) என்றுமிருக்கும் ஹிரண்யராவணாதி₃களைப் போலே தன்னோடே எதிரம்பு கோத்து நிற்கிற ஆத்மாக்களைப் பார்த்தருளி, "இவை ஶாஸ்த்ரமார்க்க₃த்தாலே திருத்த ஒருப்பட்டதல்ல; இவர்களுடைய விஷயப்ராவண்யமே பற்றாசாக நம்முடைய அழகுகளையும், ஶீலாதி₃ கு₃ணங்களையும் காட்டித்திருத்துவோம்" என்று வழியிட்டு, ப்ரத₂மத்திலே ருசிஜனகனாய், ருசிபிறந்தார்க்கு உபாயமுமாய், அதிலே நிஷ்டா₂ரானார்க்கு ப்ராப்யனுமாய் இருக்கும் படியைச் சொல்லுகிறது இப்ரப₃ந்த₄ம்.

"ப்ராப்யப்ராபகங்களை முதல் ஶ்லோகத்தாலே ஸங்க்₃ரஹமாகச் சொல்லி, மேலில் ஶ்லோகங்களாலே விஸ்தரிக்கிறது" என்று ப₄ட்டர் நிர்வாஹம். முதல் இரண்டு ஶ்லோகத்தாலே ப்ராப்யப்ராபகங்களைச் சொல்லி, மேலில் ஶ்லோகங்களாலே அதுக்கு அடியான ஶரண்யதையைச் சொல்லுகிறதாகவுமாம. ஶரண்யதையை முதலில் சொல்லி, உபாயோபேயங்களைச் சொல்ல ப்ராப்தமாயிருக்க, பின்னே ஶரண்யதையைச் சொல்லுவானென்? என்னில்: " b'முனியே நான்முக'னிலே திருவாணையிட்டுப் பின்பு அது பெருவாணையல்லாமை ஸாதி₄த்தாப்போலே இது" என்று திருநறையூர் அரையர் நிர்வாஹம்.

அவதாரிகை ஸம்பூர்ணம்.

---

a திருவாய் 1-2-1. b திருவாய் 10-10.

ஜிதந்தே ஸ்தோத்ரம்

जितन्ते पुण्डरीकाक्ष! नमस्ते विश्वभावन!।
नमस्तेऽस्तु हृषीकेश! महापुरुष! पूर्वज!॥ १॥

1. ஜிதந்தே புண்டரீகாக்ஷ! நமஸ்தே விஶ்வபாவந!।
நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேஶ! மஹாபுருஷ! பூர்வஜ!॥

---

1. **பதவுரை:— புண்டரீகாக்ஷ**—செந்தாமரைக்கண்ணு! **ஜிதம் தே**—உன்னால் (இவ்வாத்மவஸ்து) ஜயிக்கப்பட்டது; **நம:**—(இது) என்னுடையதல்லவே; **தே**—உன்னுடையதாயிற்றே; **விஶ்வபாவந**—உலகையெல்லாம் உண்டாக்கினவனே! **ஹ்ருஷீகேஶ** — இந்திரியங்களை நியமிப்பவனே! **மஹாபுருஷ**—கொடுப்பதில் சிறந்தவனே! **பூர்வஜ**—முற்பாடனாகப் பிறப்பவனே! **நம: தே அஸ்து** — (இவ்வாத்மவஸ்து) எனக்காகை தவிர்ந்து உனக்கே ஆகவேணும்.

அவ:— முதல் ஶ்லோகத்தாலே, ப்ராப்யநிஷ்கர்ஷ பர்யந்தமாக இவன் ப்ரார்த்திக்கும்படியாக ஈஶ்வரன் தன் அழகாலே தோற்பித்துக் கொண்டபடியைச் சொல்லுகிறது.

வ்யா:— (ஜிதந்தே) a "யாதானும் பற்றி நீங்கும் விரதம்" என்கிறபடியே, விஷயாந்தரங்களைப் பற்றி, 'எம்பெருமான் முகத்தில் விழியேன்' என்று இவன் வ்ரதம் கொண்டிருக்க, ஈஶ்வரன் b "தானொட்டி வந்து" என்கிறபடியே விஷயாந்தரங்களில் துவக்கை அறுத்து, ஸ்வரூபஜ்ஞானத்தை உண்டாக்கி, 'அவஶ்யம் உம்மைக் கொண்டல்லது விடேன்' என்று வ்ரதம் கொண்டு, யாத்ருச்சிகமாக இவன் விஷயாந்தரங்களிலே நெகிழ நின்றவளவிலே, c "இருந்தான் கண்டுகொண்டு" என்கிறபடியே தன் அழகைக் காட்டி ஜயித்து, இவன் தோற்றமை கண்டு ப்ரீதனாய், "தோற்றார்

---

a திருவிருத்தம்-95. b திருவாய் 1-7-7. c திருவாய் 8-7-2.

ஆர்?" என்று கேட்டருள, a "தோற்றேரும் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு" என்கிறபடியே "ஜயஸ்தவ" என்கிறுன். த்ருதீயார்த்தே₂ ஷஷ்டி₂யாய் உன்னுலே ஜயம் என்னுதல்; ப₄ாவே நிஷ்டை₂யாய் உன்னுடைய ஜயம் என்னுதல். ப₃ந்த₄மடியான ஸங்கல்பம் அவனது; அதின் ஸந்நிதி₄யிலே கர்மமடியாக வந்த இவன் ஸங்கல்பம் ஜீவிக்கவோ? ஸர்வஶக்தி ஸங்கல்பத்தை விஷயசபலனுடைய ஸங்கல்பம் அழிக்கவோ? 'நாம் என்கொண்டு உம்மை வெல்ல?' என்ன: (புண்ட₃ரீகாக்ஷ) அழகிய கண்களாகிற ப்₃ரஹ்மாஸ்த்ரத்தை உடைய உனக்கு வெல்லவொண்ணுதது உண்டோ? சேதனர் சேதனங்களை அகப்படுத்துவது கண்வழியாலேயாகையாலே, திருக்கண்களாலே ஜயித்தாய் என்கை. ஸ்வதந்த்ரனை முறையைக் காட்டி மீட்கலாம்; விஷயப்ரவணனை மீட்க அழகல்லது பரிகரமுண்டோ? (நமஸ்'தே) 'ஆரதை ஆர் வென்ருர்?' என்னில்: ஆராய்ந்தவாறே உன்னதை நான் அபஹரிக்க, என்னை ஜயித்து, நீயே உன்னதைக் கைக்கொண்டாயாயிருந்தது. 11. "**अहमपि न मम। भगवत एवाहमस्मि।**" (அஹமபி ந மம। ப₄க₃வத ஏவாஹமஸ்மி।) என்னக்கடவதிறே. நமஶ்ஶப்₃த₃ம் ஶரணபர்யாயமாகையால் ப்ரபத₃னமென்னவுமாம். எங்ஙனேயென்னில்: கண்ணழகிலே ஈடுபட்டு மிடுக்கறுகையாலே அஶக்தாதி₄காரமான உபாயத்தைப் பற்றுகிருன். ப்ராப்யத்தில் ருசி பிறந்தால், அத்தை லபி₄க்கும் ஸாத₄னமிறே அனந்தரம் தேட்டம். அத்தைச் சொல்லுகிறது. 'விஷயாந்தரங்களில் துவக்கை அறுத்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக என் ஆத்மாவைத் தந்தேன்' என்று ஆத்மஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறது என்றுமாம். b "எனதாவி தந்தொழிந்தேன்" என்னுமாபோலே. இது வகைப்பொருள். (நமஸ்தேऽஸ்து) அப்படி எனக்காகை தவிர்ந்து உனக்கேயாம்படி பண்ணியருளவேணும். c "மனக்காராமை மன்னி உண்டிட்டாய் இனி

a திருவாய் 2-1-7. b திருவாய் 2-3-4. c திருவாய் 10-10-6.

உண்டொழியாய்" என்னுமாபோலே. 'ருசியைப் பிறப்பித்துத் தன் பேருக உபகரியாநிற்க, மேல் விழுந்து அர்த்திப்பானென் ?' என்னில் : ருசியை விளைப்பித்து ஸ்வரூபஜ்ஞானத்தை உண்டாக்கினவாறே ஸ்வரூபானுகுணமான அடிமையை ப்ரார்த்திக்கிருன். கூனி கூன் நிமிர்ந்து யோக்யதை பெற்றவாறே 12. "**वस्त्रे प्रगृह्य गोविन्द! मम गेहं व्रजेति वै**" (வஸ்த்ரே ப்ரக்ருஹ்ய கோவிந்த! மம க்ருஹம் வ்ரஜேதி வை) என்று மடிபிடித்தாப்போலே இங்கும். ஆத்மாவினுடைய • கோணுகையாலே கண்ணழகாலே நிமிர்த்துக் கொண்டான் என்கை. அஹங்காரமமகாரமாகிற • கோண் போய், பாரதந்த்ர்யம் ப்ரகாஶித்தாலிறே கைங்கர்யரஸத்துக்கு யோக்யமாவது. ஸ்ரீமாலாகாரரை அழகாலே ருசியைப் பிறப்பித்து, 13. "**पुनः पुनः प्रणम्याह मालाकारोऽतिविस्मितः**" (புந: புந: ப்ரணம்யாஹ மாலாகாரோऽதி விஸ்மித:) என்று திருவடிகளிலே விழும்படி பண்ணி அடிமை கொண்டானிறே. (**விஶ்வபாவந**)மேல் அபேக்ஷிதம் செய்கைக்கு ப்ராப்தி சொல்லுகிறது. விஶ்வம் பாவயதீதி விஶ்வபாவந: ; உரு மாய்ந்து கிடந்த இந்த ஜகத்தை உண்டாக்கினவனல்லையோ? இல்லாததை உண்டாக்கினவனுக்கு உள்ளதுக்கு ஒரு குணம் விளைப்பிக்கைக்குப் பணியுண்டோ? முமுக்ஷுஸிஸ்ருக்ஷயாவன்றோ பகவத்ஸ்ருஷ்டி. (**ஹ்ருஷீகேஶ**) 'ஸ்ருஷ்டிகாலத்தில் விலக்கும் பரிகரமில்லை; இப்போது உன் இந்த்ரியங்களைத் திருத்தவொண்ணுமையாலே விலக்கும் பரிகரம் உண்டே' என்னில்: அவையும் நீ இட்டவழக்கன்றோ? 14."**हृषीकाणीन्द्रियाण्याहुस्तेषामीशो यतो भवान्। हृषीकेश इति ख्यातः**" (ஹ்ருஷீகாணீந்த்ரியாண்யாஹுஸ் தேஷாமீஶோ யதோ பவாந்। ஹ்ருஷீகேஶ இதி க்யாத:) என்றும், ₂ "இருடீகேசன் எம்பிரான் இலங்கை அரக்கர் குலம் முருடு தீர்த்த பிரான்" என்றும் சொல்லக்கடவதிறே. இந்த்ரியங்களுக்கு என்னேடு உண்டான ஸம்

• கோண்—கூன்; வளைவு. ₂ திருவாய் 2·7·10.

ப₃ந்த₄ம் கர்மோபாதி₄கம்; 15. "**यश्चक्षुषि तिष्ठन् — वाचि तिष्ठन्**" (யஶ் சக்ஷுஷி திஷ்ட₂ந் — வாசி திஷ்ட₂ந்) என்கிறபடியே நிருபாதி₄கஸம்ப₃ந்த₄ம் உன்பாடேயன்றோ? (**மஹாபுருஷ**) 'ஶக்தி உண்டானாலும் வல்லதெல்லாம் செய்வாருண்டோ?' என்னில்: (**புருஷ**) "புரு-ப₃ஹு, ஸநோதீதி புருஷ:" என்னும்படியே மறித்து உன்பாடு வரவேண்டாதபடி அபேக்ஷிதங்களை மிகவும் கொடுக்கவல்ல பரமோதா₃ரனல்லையோ? அன்றிக்கே, உன்னையும், உன் உடைமையையும் "ப₄க்தாநாம்" (ஶ்லோ-5) என்கிறபடியே அர்த்தி₂யாய்க்கொடுக்கை. 16. "**स सर्वानर्थिनो दृष्ट्वा समेत्य प्रतिनन्द्य च**" (ஸ ஸர்வாநர்த்தி₂நோ த்₃ருஷ்ட்வா ஸமேத்ய ப்ரதிநந்த்₃ய ச) என்னக்கடவதிறே. (**பூர்வஜ**) கீழ்ச்சொன்ன ஔதா₃ர்யந் தன்னை அனுஷ்டா₂னத்தாலே விவரிக்கிறது. ஸ்ருஷ்டியோடு அவதாரத்தோடு உபாயத்தோடு வாசியற இழவு பேறு தொடக்கமான எல்லாத்துக்கும் முற்பாடனல்லையோ? 17. "**बहु स्यां**" (ப₃ஹு ஸ்யாம்) என்று ப்ரயோஜனமும் அபி₄மானமும் தன்னதானவோபாதி 18. "**स एकाकी न रमेत**" (ஸ ஏகாகீ ந ரமேத) என்னும் இழவும் தன்னதாகச் சொல்லிற்றிறே. அவதாரத்திலும், 'ஸ்ருஷ்டமான ஜக₃த்திலே நம்மை அபி₄முகி₂களாகக்கடவார்' என்னும் நோயாசையாலே, 19. "**संभवाम्यात्ममायया**" (ஸம்ப₄வாம் யாத்மமாயயா) என்று ஸ்வேச்சை₂யாலேயாயிருப்பது. 20. "**स हि देवैरर्थितो जज्ञे**" (ஸ ஹி தே₃வைரர்த்தி₂தோ ஜஜ்ஞே) என்று தே₃வர்களுடைய அர்த்தி₂த்வம் இல்லையோ? என்னில்: அது வ்யாஜம்; ஸாது₄பரித்ராணமே ப்ரயோஜனம். 21. "**परित्राणाय साधूनां**" (பரித்ராணாய ஸாதூ₄நாம்) என்று தொடங்கி 21. "**धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे**" (த₄ர்மஸம்ஸ்தா₂பநார்த்தா₂ய ஸம்ப₄வாமி யுகே₃ யுகே₃) என்றானிறே. அர்ஜுனனுடைய யுத்₃த₄ப்ரோத்ஸாஹநவ்யாஜமாக ஸ்வவிஷயப₄க்தியோக₃த்தை அவதரிப்பித்தாப்போலே. 22. "**उपायोपेयत्वे तदिह तव तत्त्वं**" (உபாயோபேயத்வே ததி₃ஹ தவ தத்த்வம்) என்று உபேயபா₄வத்

देवानां दानवानां च सामान्यमधिदैवतम्।
सर्वदा चरणद्वन्द्वं व्रजामि शरणं तव॥ २॥

2. தே₃வாநாம் தா₃நவாநாம் ச ஸாமாந்யமதி₄தை₃வதம் ।
ஸர்வதா₃ சரணத்₃வந்த்₃வம் வ்ரஜாமி ஶரணம் தவ ॥

தோபாதி உபாயப₄ாவமும் நித்யமிறே. ஒருத்தன் ஸ்வீகரித்த போதாக உபாயமாகிருனன்றிறே. பே₄ாக₃வேளையிலும் பஞ்சலக்ஷம் குடியில் பெண்களிற்காட்டில் தன்னுடைய முற்பாடு தோற்றுகைக்காகவிறே திருக்குழலை வாய் வைத்தருளிற்று. இந்த பே₄ாக₃ந்தான் அவிச்சி₂ந்நமாகவேணுமென்று அபி₄நிவேஶம் பிறந்தவனுக்கு, அப்போது அவிச்சி₂ந்நபே₄ாக₃ஸ்தா₂நம் எங்கேயோ என்று தேடவேண்டாதபடி 23. "श्रिया सार्धं जगत्पतिः—आस्ते" (ஶ்ரியா ஸார்த்த₄ம் ஜக₃த்பதி: — ஆஸ்தே) என்கிறபடியே நித்யவிபூ₄தியிலே இவனுடைய வரலாறு பார்த்திருக்கிருனிறே. 1.

2. பதவுரை:— **தே₃வாநாம்**—விஷ்ணுப₄க்தியுடையவர்களுக்கும், **தா₃நவாநாம் ச**—ப₄க₃வத்₃ப₄க்தியற்றவர்களுக்கும், **ஸர்வதா₃**—எப்போதும், **ஸாமாந்யம் அதி₄தை₃வதம்**—ஸமானமாகப் பற்றலாம்படியிருக்கும், **தவ**—உன்னுடைய, **சரணத்₃வந்த்₃வம்**—திருவடியிணையை, **ஶரணம்**—உபாயமாக, **வ்ரஜாமி**—நிச்சயிக்கிறேன்.

அவ:— (தே₃வாநாம் இத்யாதி₃) கீழ் ஶ்லோகத்திலே உபேயத்தை நிர்ணயித்து, தத்ஸித்₃த்₄யர்த்த₂மாக உபாயத்தை அத்₄யவஸிக்கிருன். உபேயத்திலும் தலையான உபேயத்தை லபி₄த்தாப்போலே, உபாயத்திலும் தலையான உபாயத்தை லபி₄க்கப்பெற்றபடி. புத்ரபஶ்வந்நாதி₃களையே ப்ராப்யமென்று இருப்பாரும், தே₃வர்களைப்பற்றி ஸ்வர்க்கத்தை லபி₄க்கையே புருஷார்த்த₂ம் என்றிருப்பாரும், ஈஶ்வரனையே பற்றி வைத்து, இந்த்₃ரபத₃ம் முதலான பத₃ங்களையே புருஷார்த்த₂மென்று அவன் பக்கலிலே

லபி₄க்கவிருப்பாருமாயிருக்கிற ஸம்ஸாரத்திலே, ஸர்வாதி₄கனுய், ஸமஸ்தகல்யாணகு₃ணுத்மகனுய், உப₄யவிபூ₄திநாயகனுயிருக்கிற ஸர்வேಶ்வரன் திருவடிகளிலே நித்யகைங்கர்யத்தையே புருஷார்த்த₂மென்று இருக்கையாகிற இது, ஒருத்தருக்கும் கிட்டுவதொன்றன்றிறே. 24. **"मनुष्याणां सहस्रेषु"** (மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு) என்றும், 25. **"स महात्मा सुदुर्लभः"** (ஸ மஹாத்மா ஸுது₃ர்லப₄:) என்றும் அவன்தனக்கும் து₃ர்லப₄மாயிறே இருப்பது. அதுபோலே, உபாயங்களிலும் வந்தால்—கர்மயோகா₃த்₃யுபாயங்களைப் பற்றுவாரும், 26. **"किं जपन् मुच्यते जन्तुर्जन्मसंसारबन्धनात्"** (கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரப₃ந்த₄நாத்) என்கிறபடியே திருநாமங்களைப் பற்றுவாரும், 27. **"देशोऽयं सर्वकामधुक्"** (தே₃ಶோऽயம் ஸர்வகாமது₄க்) என்கிறபடியே தே₃ಶவிಶேஷங்களைப் பற்றுவாருமாக, இப்படிச் சேதநபே₄த₃த்தோபாதி உபாயபே₄த₃மும் அஸங்க்₂யாதமாகச் செ(ா)ல்லுகிற ஸம்ஸாரத்திலே, ஸுಶகமாய், நிரபாயமாயிருக்கிற ஸித்₃தே₄ாபாயபரிக்₃ரஹம் கிடைப்பதொன்றன்றிறே. அப்படிப்பட்ட உபாயபரிக்₃ரஹத்தைச் சொல்லுகிறது. 'த்₃வயத்துக்கு வ்யாக்₂யானம் பண்ணுகிறதாகில், அதில் க்ரமமொழிய, முற்பட ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணுவானென்?' என்னில்: இப்ராப்யம்தான் இத்தலையில் ருசியால் வந்ததன்றிக்கே ருசியே தொடங்கி அத்தலையால் வந்ததாகையாலே, முற்பட நிஷ்கர்ஷித்து, அனந்தரம், உபாயஸ்வீகாரத்தைப் பணணுகிருன்.

வ்யா:— "தே₃வாநாம் த₃ாநவாநாம் ச ஸாமாந்யமதி₄தை₃வதம்" என்று இவ்வுபாயஸ்வீகாரத்துக்கு அதி₄காரி நியதியில்லை என்கிறது. தே₃வர்களாகிருர்,— ஈಶ்வரனுக்கு அனுகூலகோடியிலுள்ளார். த₃ாநவராகிருர்,— ப்ராதிகூல்யத்திலே வ்யவஸிதராயிருக்குமவர்கள். 28. **"विष्णुभक्तिपरो देवो विपरीतस्तथाऽसुरः"** (விஷ்ணுப₄க்திபரோ தே₃வோ விபரீ-

தஸ்தத₂ாऽஸுர:) என்னக்கடவதிறே. 29. **"द्वौ भूतसर्गौ लोकेऽस्मिन् दैव आसुर एव च"** (த்₃வௌ பூ₄தஸர்க்₃கௌ லோகேऽஸ்மிந் தை₃வ ஆஸுர ஏவ ச) என்று இரண்டுக்குள்ளே அந்தர்ப்பூ₄தையிறே ஸ்ருஷ்டி. **(ஸாமாந்யமநி₄ தை₃வதம் சரணத்₃வந்த்₃வம்)** ஸர்வஸாத₄ாரணமான திருவடிகளை. இத்தால் ஸம்ப₃ந்த₄ஸாமாந்யத்தைச் சொல்லுகிறதன்று. ஆஶ்ரயணீயத்வே ஸமமாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. இப்படி விஶேஷிக்கிறது எத்தாலே? என்னில்: விமுக₂ரான காலத்தில் ஆஶ்ரிதவிரோதி₄களென்றிட்டு அழியச்செய்யுமவனுகையாலே. a "அவுணர்க்கென்றும் சலம் புரிந்தங்கருளில்லாத் தன்மையாளன்" என்னக்கடவதிறே. நிஹீன ஜன்ம கு₃ண வ்ருத்தரோடு இவற்ருல் உத்க்ருஷ்டரோடு வாசியற எல்லார்க்கும் ஆதி₃த்யோத₃யம்போலே எனக்கென்று பற்றலாம்படியான திருவடிகளென்கை. ராவணன் எச்சிலைத் தின்று வந்த ஸ்ரீவிபீ₄ஷணுழ்வான், 30. **"सर्वलोकशरण्याय"** (ஸர்வலோகஶரண்யாய) என்று வழக்குப்பேசிப் பற்றலாம்படியிறே இருப்பது. 31. **"समोऽहं सर्वभूतेषु"** (ஸமோऽஹம் ஸர்வபூ₄தேஷு) என்றிறே ஶரண்யன் வார்த்தை. 32. **"व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः"** (வ்யஸநேஷு மநுஷ்யாணும் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கி₂த:) என்று ஆஶ்ரயணயோக்₃யமான மனுஷ்யஸாமாந்யத்திலே க்ருபை மிக்கிறே இருப்பது. பரது₃:க்கா₂ஸஹிஷ்ணுத்வமிறே க்ருபையாவது. ஆஶ்ரயண வேளையில் 33. **"यदि वा रावणः स्वयं"** (யதி₃ வா ராவணஸ் ஸ்வயம்) என்ருனிறே. b "எல்லா உலகும் தொழும் ஆதிமூர்த்தி" என்றும், c "பொது நின்ற பொன்னங்கழல்" என்றுமிறே அபி₄யுக்தர் வார்த்தை. **(ஸர்வதா₃)** ப்ராதிகூல்யம் பண்ணுகிற வேளையேயாகிலும் ரக்ஷாபேக்ஷையே வேண்டுவதாக விஷயீகரிக்கும் திருவடிகள். 34. **"पापानां वा ... कार्यं करुणमार्येण"** (பாபாநாம் வா...கார்யம் கருணமார்

a திருநெடுந்தாண்டகம்.6. b திருவாய் 3-3-5. c மூன்ரும்-திரு 88.

யேண) என்னக்கடவதிறே. a "ஈடுமெடுப்புமிலீசன்" என்று ஆழ்வாரும் அருளிச்செய்ததுக்கும் அடி இதுவிறே. 35. "अनालोचितविशेषाऽशेषलोकशरण्य" (அநாலோசிதவிஶேஷாऽஶேஷலோகஶரண்ய) என்றதுக்கும் முதல் இதுவிறே. (சரணத்₃வந்த்₃வம்) அங்கோயாங்யம் சேர்த்தியழகைச் சொல்லுகிறது. உபாயமாக அநுஸந்தி₄க்குமளவிலே வேறொரு ப்ரயோஜனமும் வேண்டா. ப்ரயோஜனமும் இதுவே போருமென்றிருக்கை. (ஶரணம் வ்ரஜாமி) உபாயமாக அடைகின்றேன். கீழ்ச்சொன்ன ஸர்வாதி₄காரத்வம் ஸித்₃தே₄ாபாயத்தைக் குறித்து என்கை. ஸாத₄நாந்தரங்கள் அதி₄க்ருதாதி₄காரங்களாயிறே இருப்பது. "வ்ரஜ — க₃தௌ" என்கிற க₃த்யர்த்த₂ம் பு₃த்₃த்₄யர்த்த₂மாய் 'அத்₄யவஸிக்கிறேன்' என்றபடி. இத்தால் ஶரண்யன் ஸந்நிதி₄ வேண்டா; ப்ராப்தியே அமையுமென்கை. ஆசார்ய ருசிபரிக்₃ருஹீதமான வாக்யத்தில் க்ரியாபத₃த்தில் வர்த்தமான நிர்த்₃தே₃ஶத்துக்கும் அடி "வ்ரஜாமி" என்கிற வர்த்தமான நிர்த்₃தே₃ஶமே, அதை கௌ₃ணமாக உபதே₃ஶித்துப்போருகிறதும், அவனுடைய 36. "सकृदेव प्रपन्नाय" (ஸக்ருதே₃வ ப்ரபந்நாய) என்கிற வாக்யத்தைப் பற்ற. ஆக, ஸக்ருத்₃வித₄ாநம் ஈஶ்வரவிஷயீகாரத்தைப் பற்ற. ப்ராப்யருசியாலே ப்ராப்தியளவும் செல்ல அநுவர்த்திக்கக் கடவது ராக₃த்தாலே. (வ்ரஜாமி) வ்ரீஹிஸ்வீகாரம், தே₃வதாமுத்₃தி₃ஶ்ய த்₃ரவ்யத்யாக₃ரூபமான யாக₃முமன்றிக்கே, தத₃ங்க₃மான ப்ரயாஜாதி₃களுமன்றிக்கே இருக்கிறுப்போலே, உபாயஸ்வீகாரமும் உபாயமன்று; அதுக்கு அங்க₃முமன்றிக்கே அதி₄காரி விஶேஷணமாய்க் கிடக்கிறது. (தவ) 37. "अप्यहं जीवितं जह्यां" (அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்) என்றும், 38. "कपोतो वानरश्रेष्ठ! किं पुनर्मद्विधो जनः" (கபோதோ வாநரஶ்ரேஷ்ட₂! கிம் புநர் மத்₃விதே₄ா ஜந:) என்றும் தன்னை அழியமாறி

a திருவாய் 1-6-3.

एकस्त्वमसि लोकस्य स्रष्टा संहारकस्तथा।
अध्यक्षश्चानुमन्ता च गुणमायासमावृतः ॥ ३ ॥

3. ஏகஸ்த்வமஸி லோகஸ்ய ஸ்ரஷ்டா ஸம்ஹாரகஸ் தத₂ா।
அத்₄யக்ஷஶ்சாநுமந்தா ச கு₃ணமாயாஸமாவ்ருத: ॥

---

*ஶ*ரணுகூ₃தபரித்ராணம் பண்ணின கபோதோபாக்₂யானமும் அருளிச்செய்த தேவருடைய. "சரணத்₃வந்த்₃வம் வ்ரஜாமி" என்று அந்வயம்.

முதல் *ஶ்*லோகம் ப்ராப்யஸங்க்₃ரஹமானபோது, இந்த *ஶ்*லோகம் "நமஸ்தே" என்கிற பத₃த்துக்கு விவரணமாகிறது. விவரணுபேக்ஷை என்னென்னில்: 39. **"मद्याजी मां नमस्कुरु"** (மத்₃யாஜீ மாம் நமஸ்குரு) என்று நம*ஶ்ஶ*ப்₃த₃ம் ஸாத₄நாந்தரத்துக்கும் ஸாத₄ாரணமாகையாலே, *ஶ*ரண*ஶ*ப்₃த₃பர்யாயம் நம*ஶ்ஶ*ப்₃த₃த்தினுடைய விவரணமாகிறது. 40. **"गच्छध्वमेनं शरणं शरण्यं पुरुषर्षभाः"** (க₃ச்ச₂த்₄வமேநம் *ஶ*ரணம் *ஶ*ரண்யம் புருஷர்ஷப₄ா:) என்று விதி₄த்த *ஶ*ரணுகூ₃தியினுடைய அனுஷ்டா₂னவேளையிலே 41. **"द्रौपद्या सहितास्सर्वे नमश्चक्रुर्जनार्दनम्"** (த்₃ரௌபத்₃யா ஸஹிதாஸ் ஸர்வே நம*ஶ்*சக்ருர் ஜநார்த்த₃நம்) என்று நமஸ்ஸைப் பண்ணினர்கள். ஆகையாலே ஸ்த₂ாநப்ரமாணத்தாலே *ஶ*ரண*ஶ*ப்₃த₃பர்யாயம் நம*ஶ்ஶ*ப்₃த₃ம். 2.

3. பதவுரை:— **லோகஸ்ய**—எல்லா உலகங்களையும், **ஸ்ரஷ்டா**—ஸ்ருஷ்டித்தவன், **த்வம் ஏக: அஸி**—(ஸஹாயாந்தரத்தை எதிர்பாராத) நீ ஒருவனேயாகிருய்; **தத₂ா**—அப்படியே, **ஸம்ஹாரக:**—ஸம்ஹரிப்பவனும் (நீ ஒருவனே); **அத்₄யக்ஷஶ்ச**—ரக்ஷிப்பதற்குக் காலத்தை எதிர்பார்த்திருப்பவனுகவும். **அநுமந்தா ச**—(ப₃ந்த₄த்தைத் தரும் கர்மங்களில் ஈடுபடுபவனைத் தடுக்காமல்) அனுமதிப்பவனுகவும். **கு₃ணமாயாஸமாவ்ருத:**—ஸத்வரஜஸ்தமோ கு₃ணங்களுடன் கூடிய ப்ரக்ருதியால் மறைக்கப்பட்டவனுகவும் இருக்கிருய்.

அவ:—(ஏகஸ்த்வமஸீத்யாதி₃) கீழ் இரண்டு ஶ்லோகத்தாலே ப்ராப்யப்ராபகங்களைச் சொல்லிற்று, அந்த உபாய ஸ்வீகாரத்துக்கு அடியான ஶரண்யதையைச் சொல்லுகிறது மேலில் ஶ்லோகங்கள். அதில் இந்த ஶ்லோகத்தில், அநந்தரம் ஶரண்யதைக்கு உறுப்பாக அவனுடைய ஜக₃த்காரணத்வப்ரயுக்தமான ஸர்வஜ்ஞத்வாதி₃ மஹாகு₃ணங்களைச் சொல்லுகிறது. 42. "**कारणन्तु ध्येयः**" (காரணந்து த்₄யேய:) என்கிறபடியே உபாஸ்யம் ஜக₃த்காரண வஸ்துவானவோபாதி ஶரண்யமும் ஜக₃த்காரணவஸ்துவேயிறே. எங்ஙனேயென்னில்: 43. "**यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै**" (யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம் யோ வை வேத₃ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை) என்று ஜக₃த்காரணவஸ்துவைச் சொல்லி, 43. "**मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये**" (முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்₃யே) என்று மோக்ஷஸித்₃தி₄க்காக அவன் திருவடிகளில் பண்ணும் ப்ரபத்தியை ஸோபாநமாக விதி₄த்ததிறே.

வ்யா:—(லோகஸ்ய ஸ்ரஷ்டா த்வம் ஏக: அஸி) "லோக ஶப்₃த₃த்தாலே, "லோக்யத இதி லோக:" என்கிற வ்யுத்பத்தியால் ப்ரத்யக்ஷஸித்₃த₄மாயும், ஶ்ருதிஸித்₃த₄முமாயுள்ள ஸகலபதா₃ர்த்த₂ங்களுக்கும் ஸ்ரஷ்டாவென்கை. "த்வம்" என்கிற ஏகவசனத்தாலே ஸ்ரஷ்ட்ரந்தரவ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. 44. "**आकाशाद्वायुः। वायोरग्निः। अग्नेरापः। अद्भ्यः पृथिवी।**" (ஆகாஶாத்₃வாயு:। வாயோரக்₃நி:। அக்₃நேராப:। அத்₃ப்₄ய: ப்ருதி₂வீ।) என்று அசேதனங்களுக்கும், 45. "**ब्रह्माऽसृजत्**" (ப்₃ரஹ்மாऽஸ்ருஜத்) இத்யாதி₃களிலே சேதனர்க்கும் ஶ்ருதிஸ்ம்ருதிகளிலே கர்த்ருத்வம் சொல்லாநிற்க, ஈஶ்வரனே ஸர்வஸ்ரஷ்டா என்றபடியென்? என்னில்: சேதநாசேதநஶரீரியானவன் ஸர்வஸ்ரஷ்டாவாகையால் ஸர்வஸ்ரஷ்டா ஈஶ்வரனே. 46. "**स्वात् शरीरात् सिसृक्षुर्विविधाः प्रजाः**" (ஸ்வாத் ஶரீராத் ஸிஸ்ருக்ஷுர் விவித₄ா: ப்ரஜா:) என்று மனு. 47. "**स एव सृज्यस्स च**

सर्गकर्ता, स एव पात्यत्ति च पाल्यते च। ब्रह्माद्यवस्थाभिरशेषमूर्तिर्विष्णुर्वरिष्ठो वरदो वरेण्यः॥" (ஸ ஏவ ஸ்ருஜ்யஸ்ஸ ச ஸர்க்க₃கர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச। ப்₃ரஹ்மாத்₃யவஸ்த₂ாபி₄ரஶேஷமூர்த்திர் விஷ்ணுர் வரிஷ்டோ₂ வரதோ₃ வரேண்ய:||) இதி பராஶர:. 48. "तदभिध्यानादेव तु तल्लिङ्गात् सः" (தத₃பி₄த்₄யாநாதே₃வ து தல்லிங்கா₃த் ஸ:) இதி ஸூத்ரம். 'ஏக' பத₃த்தாலே ஸஹாயாந்தரநிரபேக்ஷதையைச் சொல்லுகிறது. 18. "एकाकी न रमेत" (ஏகாகீ ந ரமேத) என்று இழவு தன்னதானபடி சொல்லுகிறது. 17. "बहु स्यां प्रजायेय" (ப₃ஹு ஸ்யாம் ப்ரஜாயேய) என்று இவனுடைய ப்ரயோஜனமும் அபி₄மானமும் தன்னதென்கிறது. 49. "एकमेवाद्वितीयं" (ஏகமேவாத்₃விதீயம்) என்று ஸஹகாரிநைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. இந்த ஸஹாயாந்தரநைரபேக்ஷ்யந்தன்னை a "தனிமாப்புகழே எஞ்ஞான்றும்" என்கிற பாட்டிலே ஆழ்வார் அருளிச்செய்தாரிறே. இத்தால் அர்த்தித்₂வநிரபேக்ஷமாக இவற்றை உண்டாக்கினவன், அர்த்தித்₂வமும் உண்டானால் ரக்ஷிக்கச் சொல்லவேண்டாவிறே என்கை. சரமஶ்லோகத்தில் ஏகபத₃மும் உபாயநைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது. இந்த ஏகபத₃ம் உத்பாத₃கத்வத்தில் நைரபேக்ஷ்யத்தைச் சொல்லுகிறது. (தத₂ா ஸம்ஹாரக:) ஸ்ருஷ்டியோபாதியும் ஹிதகாமனாய் ஸம்ஹரிக்கிறாய் நீ ஒருவனுமேயன்றோ. புருஷார்த்தோ₂பயோகி₃யாக ஶரீரத்தைக் கொடுக்க, இத்தைக்கொண்டு பரஹிம்ஸாதி₃களிலே இழிந்து அதிப்ரவ்ருத்தனாய்த் தன்னை நஶிப்பித்துக்கொள்ளுமளவிலே, அந்த ஶரீரத்தையும் அழியச்செய்கை ஹிதமேயிறே. இத்தாலும் ஶரண்யதையைச் சொல்லுகிறது. இவன் தன்னை இவன் கையில் காட்டிக்கொடாமையால். (அத்₄யக்ஷஶ்ச) "ஸ்ருஷ்டிப்ரயோஜனமான மோக்ஷருசி இவர்களுக்கு உண்டாகவற்றேறே?" என்று அவஸரப்ரதீக்ஷனாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. b "ஆள் பார்த்து உழி

---

a திருவாய் 8-10-7. b நான்-திருவ-60.

தருவாய் கண்டுகொள்'' என்னக்கடவதிறே. "புருஷார்த்த₃ ஸாத₄னமான ஸ்வஶரீரங்கொண்டு புருஷார்த்த₂த்தில் இழிகையன்றிக்கே, ஸ்ருஷ்டிஸம்ஹாரத்துக்கே விஷய மாவதே இவை'' என்று இவற்றினுடைய அனர்த்த₂த்தை அனுஸந்தி₄த்திருக்கிறபடியைச் சொல்லுகிற தென்றுமாம். 32. "व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः" (வ்யஸநேஷு மநுஷ்யாணும் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கி₂த:) என்னக்கடவதிறே. இப்படியிருக்கிறவன் புருஷார்த்த₂த்தை அபேக்ஷித்தால் ரக்ஷிக்கச் சொல்ல வேண்டா விறே. (**அநுமந்தா ச**) விஷயாந்தரங்களில் ப்ராவண்யத்தால் தத்ஸாத₄னமான ப₃ந்த₄ககர்மங்களிலே ப்ரவர்த்தியாநின்ருலும் அங்கண்ணனுய்க்கொண்டு நிஷே தி₄க்கமாட்டாதே நிற்கும். எத்தாலே யென்னில்: "க்ஷேத்₃த்₃ர ப்ரயோஜனத்துக்காகவாகிலும் நம் பக்கலிலே வரப்பெற் ருேம்; ஸர்வஶக்தியான நாம் உளோமிறே; இடம் வந்த விடத்திலே ரக்ஷிக்கிருேம்'' என்னும் நினைவாலே. 'இப்படி வத்ஸலனுனவன் இத்தலை இசைந்தால் ஹிதகாமனென்னு மிடம் சொல்லவேணுமோ?' என்று கருத்து. (**கு₃ணமாயா ஸமாவ்ருத:**) 'இப்படி இவர்கள் ப₃ஹிர்முக₂ராகைக்கு அடியென்?' என்னில்: கு₃ணமயியான மாயையால் மறைக்கப்படுகையாலே. 50. "**भगवत्स्वरूपतिरोधानकरीं**" (ப₄க₃வத்ஸ்வரூபதிரோத₄ாநகரீம்) என்கிறபடியே இச்சே தனனை மாயை மறைக்கையால் அவனையும் மறைத்த தாமிறே. தன் உடைமையான இவன் கு₃ணவஶ்யனுய், a 'பொய்ந்நின்ற ஞான'த்திலே கலங்கினுல், இக்கு₃ணஸம் ப₃ந்த₄மின்றிக்கே ஸர்வஜ்ஞனனவனே ஶரண்யனுகவேணும் என்று கருத்து. 51. "**सत्त्वादयो न सन्तीशे यत्र च प्राकृता गुणाः**" (ஸத்த்வாத₃யோ ந ஸந்தீஶே யத்ர ச ப்ராக்ருதா கு₃ணு:) என்னக்கடவதிறே.

---

a *திருவிருத்தம்*-1.

संसारसागरं घोरमनन्तक्लेशभाजनम् ।
त्वामेव शरणं प्राप्य निस्तरन्ति मनीषिणः ॥ ४ ॥

4. ஸம்ஸாரஸாக₃ரம் கோ₄ரமநந்தக்லேஶப₄ாஜநம் ।
த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: ॥

முதல் ஶ்லோகம் ஸர்வஸங்க்₃ரஹமானபோது, இஶ்லோகம் "விஶ்வப₄ாவந" என்கிற பதத்தினுடைய விவரணமாகிறது. ஜநிஸ்தி₂திலயங்களுக்கு ஆஶ்ரயமாகையும் ஸஹகாரிநைரபேக்ஷ்யமுமிறே ப₄க₃வல்லக்ஷணம்; அது இஶ்லோகத்தில் சொல்லுகிறது. 3.

4. பதவுரை:— மநீஷிண:—மனஸ்ஸை ஜயித்திருப்பவர்கள், த்வாமேவ—உன்னையே, ஶரணம்—உபாயமாக, ப்ராப்ய — அடைந்து, அநந்தக்லேஶப₄ாஜநம்—கணக்கற்ற து₃:க்க₂ங்களுக்குப் பிறப்பிடமாய், கோ₄ரம்—மிகக்கொடிதாயிருக்கும், ஸம்ஸாரஸாக₃ரம்—ஸம்ஸாரமாகிய ஸமுத்₃ரத்தை, நிஸ்தரந்தி—தாண்டுகிறார்கள்.

அவ:—(ஸம்ஸாரஸாக₃ரமித்யாதி₃) கீழ்ச்சொன்ன ப₄க₃வத்காரணத்வம், 42. "कारणन्तु ध्येयः" (காரணந்து த்₄யேய:) என்றும், 43. "यो ब्रह्माणं विदधाति पूर्वं" (யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம்) என்றும், 43. "मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये" (முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்₃யே) என்றும் உபாஸனத்துக்கும் ஸாத₄ாரணமாகையாலும், ப்ரபத்தி உபாஸனத்துக்கு அங்க₃மாவதொழிய ஸ்வதந்த்ரோபாயமென்கைக்கு அனுஷ்ட₂ானமுண்டோ? என்ன: "ஸ்ருஷ்டியில் கர்மீப₄வித்தவர்களிலே தந்தாமுடைய மனஸ்ஸுக்கு நிர்வாஹகராயிருப்பார் சிலர் உன்னையே உபாயமாகப்பற்றி ஸம்ஸாரத்தைக் கடவாநிற்பார்கள்" என்கிறது. இத்தால் 'ப்ரபத்திக்கு ப்ரமாணப்ரஸித்₃தி₄யேயன்று உள்ளது; ஶிஷ்டாசாரமும் உண்டு' என்கிறது.

வ்யா:—ஸம்ஸாரமாகிறது:— அவித்₃யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ங்களும், ஷட்₃பா₄வவிகாரங்களும். புத்ர மித்ர களத்ராதி₃களும் தத்கார்யமாகையாலே ஸம் ஸாரஶப்₃த₃வாச்யங்களாகிற இத்தனை. 26. "जन्मसंसारबन्ध-नात्—मुच्यते" (ஜந்மஸம்ஸாரப₃ந்த₄நாத்—முச்யதே) என்று ஜன்மாதி₃களைக் கார்யவர்க்க₃ங்களாகவும், அவித்₃யாதி₃ களைக் காரணவர்க்க₃மாகவும் சொல்லிற்றிறே. பரிச்சே₂ தி₃க்கவொண்ணாமையாலும், தன்பக்கல் இழிந்தாரைக் கொண்டு இழியுமதாகையாலும், புகலாமித்தனைபோக்கி, புக்கால் தந்தாமால் கரையேறவொண்ணாமையாலும், இத்தை ஸாக₃ரமாக நிரூபிக்கிறது. (கோ₄ரம்) கொடிதா யிருக்கை. அதாகிறது:—ஸர்வர்க்கும் து₃:க்க₂மென்று மீள லாம் நரகாதி₃களைப்போலன்றிக்கே, ஆத்மாவுக்கு விநாஶ ஹேதுவாய் இருக்கச்செய்தேயும் a "இன்னமுதெனத் தோன்றி" என்று முகப்பிலே ஆகர்ஷகமாயிருக்கும் தன் மையை உடைத்தாயிருக்கை. அஹங்காரஸித்₃தி₄க்கும் விஷயாந்தர போ₄க₃த்திற்கும் ஸம்ஸாரிகள் உபாயானுஷ் டா₂னம் பண்ணுகிறார்களிறே. (அநந்தக்லேஶபா₄ஜநம்) தாப த்ரயது₃:க்க₂த்தாலே தொகையற்ற க்லேஶத்துக்கெல்லாம் உத்பத்திஸ்தா₂னமாயிருக்கை. b "நலமந்தமில்லதோர் நாடு" என்று ஒரு தே₃ஶவிஶேஷத்தில் ஸுக₂த்திற்கு முடிவில்லாதாப்போலே, இதில் து₃:க்க₂த்துக்கு முடிவில்லை என்கை. (த்வாமேவ ஶரணம் ப்ராப்ய) தாரதம்யத்தை உடைத்தான ஸம்ஸாரத்தினுடைய கொடுமை சொல் லிற்று கீழ்; இத்தைக் கடப்பிக்கும் உபாயத்தினுடைய ஸௌலப்₄யத்தைச் சொல்லுகிறது. (த்வாம்) "ஏகஸ்த்வ மஸி" என்கிற ஶ்லோகத்தில் ஜக₃த்காரணத்வப்ரயுக்தமான மஹாகு₃ணங்களை உடைய உன்னை. அவதா₄ரணத்தாலே— ஜக₃த்ஸ்ருஷ்டியில் ஸஹாயாந்தரநைரபேக்ஷ்யம்போல, உபாயபா₄வத்திலும் ஸஹகாரிஸாபேக்ஷனல்லனென்கிறது.

a திருவாய் 7.1-8. b திருவாய் 2.8.4.

न ते रूपं न चाकारो नायुधानि न चास्पदम्।
तथाऽपि पुरुषाकारो भक्तानां त्वं प्रकाशसे॥ ५॥

5. ந தே ரூபம் ந சாகாரோ நாயுத₄ாநி ந சாஸ்பத₃ம் ।
தத₂ாऽபி புருஷாகாரோ ப₄க்தாநாம் த்வம் ப்ரகாஶஸே ॥

52. "**त्वमेवोपायभूतो मे भव**" (த்வமேவோபாயபூ₄தோ மே ப₄வ) என்கிற இதினுடைய உபப்₃ரும்ஹணமான ஶாஸ்த்ரத்திலும் இந்த நைரபேக்ஷ்யம் உக்தமிறே. 53. "**मामेव ये प्रपद्यन्ते**" (மாமேவ யே ப்ரபத்₃யந்தே) என்றிறே ஶரண்யன் வார்த்தையும். ஆசார்யஸேவையும் இவ்வவத₄ாரணத்துக்குத் தாத்பர்யமறிகை. "ஶரணம்" என்று உபாஸனத்தை வ்யாவர்த்திக்கிறது. "வ்ரஜாமி ஶரணம் தவ" என்கிறவிடத்திலே 'வ்ரஜாமி'யினுடைய ஸ்த₂ானத்திலே "ப்ராப்ய" என்கிறது,—ப₄க₃வல்லாப₄த்தோபாதி உபாயப₄ாவமும் ஸுலப₄மென்று தோற்றுகைக்காக. a "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று இவ்வுபாயப்ரஸித்₃தி₄யை ப₄க₃வத்ப்ரஸாத₃ கார்யமாக ஆழ்வார் அருளிச்செய்தாரிறே. (நிஸ்தரந்தி) உன்னாலே இத்தைக் கடப்பார்கள். (மநீஷிண:) "மநோஜேதார:—மநீஷிண:"; விஷயாந்தரப்ரவணமான மனஸ்ஸையும், ஸாத₄நாந்தரப்ரவணமான மனஸ்ஸையும் ஜயித்திருக்குமவர்கள். 54. "**संसारार्णवमग्नानां**" (ஸம்ஸாரார்ணவமக்₃நாநாம்) என்று ஶாஸ்த்ராந்தரத்திலே இத்தை உபப்₃ரும்ஹித்ததிறே.

முதல் ஶ்லோகம் ஸங்க்₃ரஹமான பக்ஷத்தில், "நமஸ்தே" என்கிற பத₃த்தைப்பற்றி உதி₃க்கிறது இஶ்லோகம். இரண்டாம் ஶ்லோகமும், அதனுடைய அனுஷ்ட₂ான ப்ரகாரம் சொல்லுகிறது. அதனுடைய ப்ராவண்யத்துக்காகப் பூ₂லபர்யந்தமான ஶிஷ்டாசாரம் சொல்லுகிறது இஶ்லோகம். 4.

a திருவாய் 5-7-10.

5. பதவுரை:—ரூபம்—(உன்னுடைய) திவ்யாத்மஸ்வரூபமானது, **தே**—உனக்காக, **ந—**இராது; (ஸ்வதந்த்ரமான அது ஆச்ரிதர்களுக்காகப் பரதந்த்ரமாகவும் ஆகும் என்று தாத்பர்யம்) **ஆகார: ச**—திவ்யமங்களவிக்ரஹமும், **தே ந**—உனக்காயிராது; **ஆயுதாநி**—திவ்யாயுதங்களும், **தே ந**—உனக்காயிருக்கவில்லை; **ஆஸ்பதம் ச**—இருப்பிடமான வைகுண்டம் முதலியவைகளும், **தே ந**—உனக்காயிருக்கவில்லை; (இவையெல்லாம் உன் அடியார்களுக்காயிருக்கும் என்று பொருள்) **பக்தாநாம் த்வம்** — பக்தர்களுடைய உடைமையான நீ, **ததாபி** — இப்படி ஆச்ரிதபரதந்த்ரமான ஸ்வரூப ரூப குண விபூதிகளை உடையனாயிருந்த போதிலும், **புருஷாகார:** — புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்ட ஸர்வாதிகனாயிருக்கும் தன்மையுடன், **ப்ரகாசஸே—** விளங்குகிறாய்.

அவ:— (ந தே ரூபம் இத்யாதி) "த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி" என்று உன்னையே உபாயமாகப்பற்றி ஸம்ஸாரத்தைக் கடக்குமவர்களுக்கு உன்னையும், உன் உடைமையையும் அனுகூலமாக்கிவைப்புதி — என்கிறது இத்தால். ஆச்ரிதர் தங்களையும், தங்கள் உடைமையையும் ஈச்வரனுக்கு ஆக்கிவைக்கிறது ஸ்வரூபத்தாலே; அவன் தன்னையும் தன் உடைமையையும் அவர்களுக்கு ஆக்கிவைக்கிறது — வாத்ஸல்யஸௌசீல்யாதிகளாலே. ஆகையாலே, இத்தால் வாத்ஸல்யஸௌசீல்யாதிகளைச் சொல்லுகிறது. இத்தாலும் சரண்யதையைச் சொல்லுகிறது; கீழ் "ஏகஸ்த்வமஸி" என்கிற ச்லோகத்திற் சொன்ன ஸ்வாமித்வஸௌலப்யங்களோபாதி வாத்ஸல்ய ஸௌசீல்யங்களும் சரண்யலக்ஷணமாகையாலே.

வ்யா:— (ந தே ரூபம்) "ரூபம்" என்பது திவ்யாத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறது; "**ஆகார:**" என்று திவ்யவிக்ரஹத்தை மேலே சொல்லுகையாலே. 'இச்லோகத்தால் ஸ்வரூபாதிகள் இவனுக்கு இல்லையென்கிறது எங்

ஙனே ?' என்னில்: 'தே' என்று நிர்த்தே3ஶித்துவைத்து ஸ்வரூபாதி3களை நிஷேதி4க்கையாலே, நிஷேதி4க்கிறது எவ்வாகாரத்தாலேயென்னில், ஸ்வரூபாதி3களாலே தேவர் கொள்ளுவதொரு கார்யமில்லையென்று ஸ்வார்த்த2த்தை நிஷேதி4க்கிறது. (தே ரூபம் ந தே) உன்னுடைய தி3வ்யாத்மஸ்வரூபமும் உனக்காயிராது. ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு அனுகூலமாயிருக்கில், ஸ்வதந்த்ரமாயிருக்கிற அது பரதந்த்ரமாயிருக்கிலும் இருக்கும். 55. **"मयि भृत्ये स्थिते देवानाज्ञापयत किं नृपैः"** (மயி ப்4ருத்யே ஸ்தி2தே தே3வாநாஜ்ஞாபயத கிம் ந்ருபை:), 56. **"किङ्करौ समुपस्थितौ"** (கிங்கரௌ ஸமுபஸ்தி2தௌ) என்று சொல்லக்கடவதிறே. ஸர்வநியந்தாவானவன் ஒரு ஸம்ஸாரிக்குப் புத்ரனுனிறே. இதிறே ஆஶ்ரிதார்த்த2மான ஸ்வரூபாந்யதா2பா4வம். இந்த ஸ்வரூபஶப்3த3த்தாலே ஸ்வரூபாஶ்ரயமான ஜ்ஞானஶக்த்யாதி3களையும் உபலக்ஷிக்கிறது. எத்தாலேயென்னில்; இஶ்லோகத்தை விவரிக்கிற கூரத்தாழ்வான் 57. **"प्रवरगुणगणाश्च ज्ञानशक्त्यादयस्ते"** (ப்ரவரகு3ணக3ணாஶ்ச ஜ்ஞாநஶக்த்யாத3யஸ்தே) என்ருனிறே. 58. **"यस्सर्वज्ञस्सर्ववित्"** (யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்) என்று ஶ்ருதிஸித்3த4மான ஸர்வஜ்ஞதையை உடையவன், ஆஶ்ரிதார்த்த2மாக 59. **"अविज्ञाता"** (அவிஜ்ஞாதா) என்று அஜ்ஞனுமாய், ஆயுத4ம் எடேனென்று ஆயுத4மெடுத்து அஸத்யஸங்கல்பனுனிறே. 60. **"अनन्याधीनत्वं तव किल जगुर्वैदिकगिरः पराधीनं त्वां तु प्रणतपरतन्त्रं मनुमहे। उपालम्भोऽयं भोः श्रयति बत सार्वज्ञ्यमपि ते यतो दोषं भक्तेष्विह वरद! नैवाकलयसि॥"** (அநந்யாதீ4நத்வம் தவ கில ஜகு3ர் வைதி3ககி3ர: பராதீ4நம் த்வாம் து ப்ரணதபரதந்த்ரம் மநுமஹே। உபாலம்பே4ாऽயம் பே4ா: ஶ்ரயதி ப3த ஸார்வஜ்ஞ்யமபி தே யதோ தோ3ஷம் ப4க்தேஷ்விஹ வரத3! நைவாகலயஸி॥) என்று ஆழ்வானும் ஆஶ்ரிதவிஷயத்தில் பாரதந்த்ர்யத்தையும், தத்3க3ததோ3ஷத்தில் அஜ்ஞதையையும் சொன்னனிறே. • தி3வ்யவிக்3ரஹமும் ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு அனுகூலமான ப்ரகாரத்தை உடைத்தாயிருக்கும்; பரமபத3த்தில்

• (ந சகார:) என்னும் ப்ரதீகம் விடப்பட்டுள்ளது.

ஸூரிகளுக்கு போ₄க₃யோக்₃யமாயிருக்கும்; வ்யூஹங்களில் வந்தால் ஶ்வேதத்₃வீபவாஸிகளுக்கு போ₄க₃யோக்₃யமாயிருக்கும்; ப்₃ரஹ்மாதி₃களுக்கு ஆஶ்ரயணீயமாயிருக்கும்; விப₄வங்களில் வந்தால் அதீந்த்₃ரியமான விக்₃ரஹத்தை ஸாது₄ பரித்ராணார்த்த₂மாக இந்த்₃ரியகோ₃சரமாக்கி அனுப₄விப்பிக்கப்பார்த்தால் அனுப₄விக்கலாயிருக்கும்: இந்த 'ஆகார' ஶப்₃த₃த்தாலே ஆகாராஶ்ரயமான தி₃வ்யாப₄ரணங்களையும் உபலக்ஷிக்கிறது. 57. "भूषणान्यायुधानि" (பூ₄ஷணாந்யாயுதா₄நி) என்றுனிறே ஆழ்வானும். 61. "वस्त्राण्याभरणानि च। तं विना कैकयीपुत्रं भरतं धर्मचारिणम्॥" (வஸ்த்ராண்யாப₄ரணாநி ச। தம் விநா கைகயீபுத்ரம் ப₄ரதம் த₄ர்மசாரிணம்) என்றவையும் ஆஶ்ரிதார்த்த₂மாயிறே இருப்பது. (நாயுதா₄நி) இவை ஆஶ்ரித விரோதி₄நிரஸனத்துக்கு ஆயுத₄மாயும், வினையற்று அனுப₄விப்பார்க்கு ஆப₄ரணமாயுமிருக்கும். a "எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினை கடிவான்" என்றும், b "கூராராழி வெண் சங்கேந்திக் கொடியேன்பால் வாராய்" என்றும், c "சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும்" என்றும் சொல்லக்கடவதிறே. 57. "परिजनपरिबर्हा भूषणान्यायुधानि" (பரிஜநபரிப₃ர்ஹா பூ₄ஷணாந்யாயுதா₄நி) என்கிறபடியே பரிஜந பரிச்ச₂த₃ங்களுக்கு உபலக்ஷணமாய், 62. "यत्र पूर्वे साध्याः सन्ति देवाः" (யத்ர பூர்வே ஸாத்₄யாஸ் ஸந்தி தே₃வா:) d "அடியார்கள் குழாங்களை—உடன்கூடுவது என்று கொலோ?" என்று, ஆஶ்ரிதர்க்கு ப்ராப்யமாயிறே பரிஜன மிருப்பது. பரிச்ச₂த₃ங்களும் ஸூரிகோடியிலே அந்தர்ப்பூ₄தமாயிருக்கச்செய்தேயும், நித்யஸூரிகளுக்குக் கைங்கர்யோபகரணமாயிறே இருப்பது. (ந சாஸ்பத₃ம்) பரமபத₃ம் முதலான போ₄க₃ஸ்த₂ானங்களும் தனக்கு போ₄க₃ஸ்த₂ான மன்றிக்கே ஆஶ்ரிதர்க்காக நின்ற நிலைகளிலே காட்டி அனுப₄விக்கச் சமைந்தவையாயிருக்கும். (தத₂ாபி புருஷா

a பெரிய திருவந்-87. b திருவாய் 6-9-1.
c திருவாய் 4-2-9. d திருவாய் 2-3-10.

கார:) இப்படியிருக்கச்செய்தேயும் புருஷப்ரகாரனாயிருக்கிற இருப்பு எப்போதும் குலையாதேயிருக்கும். 63. "**पुरुष एवेदं सर्वं**" (புருஷ ஏவேத₃ம் ஸர்வம்), 64. "**सहस्रशीर्षा पुरुषः**" (ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ:) என்னும் வேதா₃ந்தங்களிலே ஸர்வாதி₄கனாக ஓதிப்போருகிறவன், இப்படி ஆஶ்ரிதாதீ₄நன் ஆனான் என்கிற மஹாகு₃ணம் தோற்றுகைக்காக, (**ப₄க்தாநாம் த்வம்**) ப₄க்தர்களுக்காயிருப்பது: அவர்கள் உனக்காயிருக்கும் இருப்பு ஸ்வரூபத்தாலே; நீ அவர்க்காயிருக்கும் இருப்பைக் குறித்து உன்னுடைய தாத₃ர்த்₃யம் ஆஶ்ரிதஸங்கல்பத்தாலேயாயிருக்கும். இத்தை 57. "**सकलमेतत्संश्रितार्थं चकर्थ**" (ஸகலமேதத் ஸம்ஶ்ரிதார்த்த₂ம் சகர்த்த₂) என்றானிறே ஆழ்வானும். 57. "**परिजनपरिबर्हा-भूषणान्यायुधानि प्रवरगुणगणाश्च ज्ञानशक्त्यादयस्ते। परमपदमथाण्डान्यात्मदेहस्तथात्मा वरद! सकलमेतत् संश्रितार्थं चकर्थ॥**" (பரிஜநபரிப₃ர்ஹா பூ₄ஷணாந்யாயுதா₄நி ப்ரவரகு₃ணக₃ணாஶ்ச ஜ்ஞாநஶக்த்யாத₃யஸ்தே। பரமபத₃மதா₂ண்டா₃ந்யாத்மதே₃ஹஸ் தத₂ாத்மா வரத₃! ஸகலமேதத் ஸம்ஶ்ரிதார்த்த₂ம் சகர்த்த₂ ॥). (ப்ரகாஶஸே) 'ஸ்வதந்த்ரனுக்குத் தத்₃விருத்₃த₄மான பாரதந்த்ர்யம் அனுபபன்னமன்றோ?' என்னில்: இதிஹாஸ புராணங்களிலே 65. "**यद्विना भरतं त्वां च शत्रुघ्नं चापि मानद। भवेन्मम सुखं किञ्चित् भस्मसात्कुरुतां शिखी॥**" (யத்₃விநா ப₄ரதம் த்வாஞ்ச ஶத்ருக்₄நஞ்சாபி மாநத₃। ப₄வேந்மம ஸுக₂ம் கிஞ்சித் ப₄ஸ்மஸாத் குருதாம் ஶிகீ₂ ॥) என்றும், 66. "**निसृष्टात्मा सुहृत्सु च**" (நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச) என்றும் இத்யாதி₃களிலே ஆஶ்ரிதபரதந்த்ரனாய் ப்ரகாஶியா நின்றாயென்னுதல்; ஆஶ்ரயிப்பாருக்கு எளியனாக உஜ்ஜ்வலியாநின்றாயென்னுதல்.

முதல் ஶ்லோகம் ஸங்க்₃ரஹமான பக்ஷத்தில் "ஹ்ருஷீகேஶ" என்கிற பத₃த்தின் விவரணமாயிருக்கிறது இஶ்லோகம்; அப்ராப்தமான விஷயாந்தரங்களில் நின்றும் மீட்டுத் தன்னையே விஷயமாக்குகையாலே; அப்ராப்தங்

नैव किञ्चित्परोक्षन्ते प्रत्यक्षोऽसि न कस्यचित्।
नैव किञ्चिदसिद्धन्ते न च सिद्धोऽसि कस्यचित्॥६॥

6. நைவ கிஞ்சித் பரோக்ஷந்தே ப்ரத்யக்ஷோ஽ஸி ந கஸ்யசித்।
நைவ கிஞ்சித₃ஸித்₃த₄ந்தே ந ச ஸித்₃தோ₄஽ஸி கஸ்யசித்॥

களில் நின்றும் மீட்டு ப்ராப்தங்களிலே அந்வயிப்பிக்கை நிர்வாஹகக்ருத்யமிறே. 5.

6. பதவுரை:—தே—உனக்கு, பரோக்ஷம்—அப்ரத்யக்ஷமாயிருப்பது, ந கிஞ்சித்—ஒன்றுமில்லை; கஸ்யசித்—ஒருவர்க்கும், ப்ரத்யக்ஷ:—கண்ணால் காணக்கூடியவனாக, ந அஸி—(நீ) ஆகிறாயல்லை; தே—உனக்கு, அஸித்₃த₄ம்–செய்யமுடியாதது, ந கிஞ்சித்—சிறிதும் இல்லை; கஸ்யசித்—ஒருவருக்கும், ஸித்₃த₄:—(ஸ்வயத்னத்தாலே) அடையக்கூடியவனாக, ந அஸி—(நீ) ஆகிறாயல்லை.

அவ:—(நைவ கிஞ்சிதி₃த்யாதி₃) "ஏகஸ்த்வமஸி" என்கிற ஶ்லோகத்தில், ஜக₃த்காரணத்வப்ரயுக்தமான ஸ்வாமித்வ ஸௌலப்₄யங்கள் உண்டானாலும், கீழ் ஶ்லோகத்தில் தன்னையும் தன் உடைமையையும் ஆஶ்ரிதார்த்த₂மாக்கின வாத்ஸல்யஸௌஶீல்யங்கள் உண்டானாலும், ஜ்ஞான ஶக்த்யாதி₃கள் இல்லையாகில் ஶரண்யனாகக்கூடாது. அதுக்காக ஜ்ஞானஶக்த்யாதி₃களைச் சொல்லுகிறது இஶ்லோகம். முன்பு உக்தமான கு₃ணங்கள் ஆஶ்ரிதர்க்கு அவனை விஷயீகரிக்கைக்கு உறுப்பாமித்தனையொழிய அபி₄மதஸித்₃தி₄க்கு ஜ்ஞானஶக்திகள் வேணுமிறே.

வ்யா:—(நைவ கிஞ்சித் பரோக்ஷம் தே) "தே பரோக்ஷம் ந கிஞ்சிதே₃வ"; உனக்கு அப்ரத்யக்ஷமாயிருப்பது ஒன்றுமில்லை. 58. "**यस्सर्वज्ञस्सर्ववित्**" (யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்) என்கிறபடியே ஸர்வஜ்ஞனென்றும், 67. "**स्वाभाविकी ज्ञानबलक्रिया च**" (ஸ்வாபா₄விகீ ஜ்ஞாநப₃லக்ரியா ச) என்று

ஸ்வதஸ்ஸர்வஜ்ஞத்வம் ஸத்தாப்ரயுக்தமென்றும, 68. "यो वेत्ति युगपत्सर्वं प्रत्यक्षेण सदा स्वतः" (யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:) என்று யுகபத் ஸாக்ஷாத்காரமும் ப்ரமாணஸித்தமிறே. அப்படிப்பட்ட தேவர்க்கு என்னுடைய ஸ்வரூபயாதாத்ம்யத்தையும், ஸ்வரூபானுரூபமான ப்ராப்யஸ்வரூபத்தையும், தத்விரோதி ப்ரக்ருதிஸம்பந்தம் என்னுமிடத்தையும், 'ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே நான் புகாத நரகமில்லை; நான் நுழையாத கர்ப்பமில்லை' என்றும் வாயாலே விண்ணப்பம் செய்ய வேண்டுவதொன்று உண்டோ? இன்னமும் நான் அறிந்த வளவன்றே விண்ணப்பம் செய்யலாவது. ப்ரவாஹ ரூபேண அநாதியாய்ப்போந்த என்னுடைய அக்ருத்ய கரணாதிபூர்வவ்ருத்தம் பழகிப்போந்த தேவரையொழிய மற்று அறிவாருண்டோ? அறிந்து விண்ணப்பம் செய்யலான விஜ்ஞாபனப்ரகாரம்தான் வேறு அறிவார் உண்டோ? இவற்றில் எனக்கு ஒரு ஜ்ஞானமில்லாதாப்போலே தேவர்க்கும் அஜ்ஞாதமாயிருப்பதொன்றுமில்லை. (கஶ்யசித் ந ப்ரத்யக்ஷாரஸி) 69. "न संदृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनं" (ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்) என்று ஒருவர்க்கும் சக்ஷுர்விஷயனல்லை; அந்வய வ்யதிரேகத்தாலே தேவருடைய அதீந்த்ரியத்வத்தை த்ருடீகரிக்கிறதிறே ஶ்ருதி தான்; இப்படிப்பட்ட தேவரை ப்ரத்யக்ஷிக்கும்போது ஆனைக்கு உதவினப்போலே ஆவிர்ப்பவித்துக் காட்டக் காணுதல், அவதரித்துக் காட்டக்காணுதலிறே. a மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வாரும் b "வாசத் தடம்போல் வருவானே ஒரு நாள் காண வாராயே" என்று காண ஆசைப்பட்டாரித்தனையிறே; தாம் காண யத்நம் பண்ணிற்றிலர். 70. "कदा नु साक्षात्करवाणि चक्षुषा" (கதா நு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா) என்றிறே ஆளவந்தார் வார்த்தையும்.

---

a திருவாய் 1-1-1. b திருவாய் 8-5-1.

(தே அஸித்₃த₄ம் ந கிஞ்சித்₃தே₃வ) 67. **"परास्य शक्तिर्विविधैव श्रूयते"** (பராऽஸ்ய ஶக்திர் விவிதை₄வ ஶ்ரூயதே) என்கிற படியே ஸர்வஶக்தியான தேவர்க்கு ஆஶ்ரிதரக்ஷணத்தில் அக₄டிதமென்று கைவாங்கவேண்டுவதொன்று உண்டோ? ஸங்கல்பமடியாக ஸர்வமும் ஸித்₃த₄மன்றோ. 71. **"संजीवयन्नपि मृतं सुतमुत्तरायाः, सान्दीपिनेश्चिरमृतं सुतमानयंश्च। धाम्नो निजात् द्विजसुतान् पुनरानयन्वा स्वामेव तां तनुमहो कथमानयस्त्वम्॥"** (ஸஞ்ஜீவயந்நபி ம்ருதம் ஸுதமுத்தராயாஸ் ஸாந்தீ₃பிநேஶ் சிரம்ருதம் ஸுதமாநயம்ஶ்ச। தா₄ம்நோ நிஜாத் த்₃விஜ ஸுதாந் புநராநயந் வா ஸ்வாமேவ தாம் தநுமஹோ கத₂மா நயஸ்த்வம்॥) என்று இப்படி அக₄டிதங்களை க₄டிப்பிக்கும் தேவரே நித்யஸம்ஸாரியான என்னை நித்யஸூரிகள் பரிமாற்றத்திலே அந்வயிப்பிக்கத் தட்டில்லை என்று கருத்து. **(கஸ்யசித் ந ஸித்₃தே₄ாऽஸி)** ஒருவர்க்கும் ஸ்வஸாமர்த்₂யத் தாலே ப்ராபிக்க அரியையாகாநின்றாய். க்ருதக்ருத்யனு ஞலும், ப்ராப்திக்கு 72. **"नयामि परमां गतिं"** (நயாமி பரமாம் க₃திம்) என்கிறபடியே அவன் கை பார்த்திருக்கவேணு மென்கை. ஆக, பேற்றுக்கு உறுப்பான ஜ்ஞானஶக்த்யாதி₃கள் உள்ளது உனக்கே; உன்னையொழிந்தாரடங்கலும் அஜ்ஞரும் அஶக்தரும். கண்ணும் காலும் உடையாய் நீயே; உன்னையொழிந்தாரடங்கலும் குருடும், முடமும். சேதனனுடைய ஜ்ஞானஶக்திகளுக்கு வினியோக₃ம், ப்ரத₂மத்தில் உபாயஸ்வீகாரத்திலே ஜ்ஞானமும், அத்₄யவஸாயத்திலே ஶக்தியுமாகக்கடவது. இந்த ஜ்ஞான ஶக்த்யாதி₃கள் இரண்டும் போ₄க₃த்திலேயாகக்கடவது. இத்தால் சொல்லிற்றாய்த்து, — இத்தலை இசைவே அடியாகக்கொண்டு ஸ்வஸம்ப₃ந்த₄த்தாலே ரக்ஷியாவிடில் தேவர்க்குப் பழியென்றதாயிற்று. ரக்ஷணத₄ர்மத்தில் ஈஶ்வரனுடைய ஜ்ஞானஶக்த்யாதி₃களே தாரகம். "ஆத்மாவுக்கு ஈஶ்வரப்ராப்தியன்று; ஈஶ்வரனுக்கு ஆத்ம ப்ராப்திகாண் நினைவு" என்று ஜீயர் அருளிச்செய்வர்.

कार्याणां कारणं पूर्वं वचसां वाच्यमुत्तमम्।
योगानां परमां सिद्धिं परमं ते पदं विदुः॥७॥

7. கார்யாணும் காரணம் பூர்வம் வசஸாம் வாச்யமுத்தமம்।
யோக₃ாநாம் பரமாம் ஸித்₃தி₄ம் பரமம் தே பத₃ம் விது₃: ||

---

73. "अहमन्नं" (அஹமந்நம்) என்கிற இதுவே அர்த்த₂ம்; 73. "अन्नादः" (அந்நாத₃:) என்று இத்தலேயில் போ₄க்த்ருத்வம் ஸ்வலாப₄த்தால் ஈஶ்வரனுக்குப் பேருன ஹர்ஷம் தனக்குப் புருஷார்த்த₂மாகை. ஸங்க்₃ரஹ பக்ஷத்தில் இஶ்லோகம் "ஜிதந்தே" என்கிற பத₃த்தினுடைய விவரணமாகக்கடவது. 6.

7. பதவுரை:— கார்யாணும்—கார்யங்களான எல்லாப் பொருள்களுக்கும், பூர்வம் காரணம்—ஆதி₃காரணமாகவும், வசஸாம் — சொற்களுக்கு, உத்தமம் வாச்யம் — மேலான சொற்பொருளாகவும், யோக₃ாநாம் — யோக₃ங்களுக்கு, பரமாம் ஸித்₃தி₄ம் — மேலான ப்ராப்யமாகவும், தே — உன்னுடைய, பரமம் பத₃ம்—மேலான திருவடிகளே, விது₃:— (பெரியோர்கள்) அறிகிருர்கள்.

அவ:— (கார்யாணும் காரணமித்யாதி₃) கீழ் ஶ்லோகத்தில் சொன்ன ஜ்ஞானஶக்த்யாதி₃களே அனுஸந்தி₄த்து, அந்த ஶக்திகாரிதமான ப₄க₃வத₃னுப₄வத்துக்கு வர்த்த₄கமான பரமபத₃த்தே என்னேப் போகவிடவேணும் என்கிறது. "முக்தப்ராப்யமான பூ₄மியைத் தருவானிறே ஶரண்யனுவான்" என்று பட்டர் நிர்வாஹம்; "நித்யானுப₄ாவ்யமான தேவர் திருவடிகளே லபி₄க்கவேணுமென்கிறது" என்னவுமாம். இது பூர்வர்கள் நிர்வாஹம்.

வ்யா:— (கார்யாணும் காரணம் பூர்வம்) அந்யோந்ய கார்யகாரணப₄ாவங்களே வ்யாவர்த்திக்கிறது. 74. "प्रधान पुंसोरजयोः कारणं कार्यभूतयोः" (ப்ரத₄ாநபும்ஸோரஜயோ: காரணம் கார்யபூ₄தயோ:) என்கிறபடியே ப்ரத₄ானபுருஷர்

களும் ஈஶ்வரனைக் குறித்துக் கார்யங்களாகக் கடவதிறே. 75. "यतः प्रसूता जगतः प्रसूती तोयेन जीवान् व्यससर्ज भूम्यां" (யத: ப்ரஸூதா ஜக₃த: ப்ரஸூதீ தோயேந ஜீவாந் வ்யஸஸர்ஜ பூ₄ம்யாம்) என்றதிறே. அந்த ப்ரக்ருதிபுருஷர்களைக் காரணமாக உடைத்தாயிறே மஹதா₃தி₃கார்யங்களிருப்பது. அவற்றைக் காரணமாக உடைத்தாயிறே அண்ட₃மிருப்பது. அண்டா₃ந்தர்வர்த்தியான ப்₃ரஹ்மாவைக் காரணமாக உடைத்தாயிறே தே₃வாதி₃சதுர்வித₄சேதனரும், தத்₃ போ₄க்₃ய போ₄கோ₃பகரண போ₄க₃ஸ்தா₂னங்களும் இருப்பது. ஆக, ப₃ஹுமுக₂மான காரணங்களுக்கெல்லாம் ப்ரத₂மகாரணமாயிறே ஸர்வேஶ்வரன் இருப்பது. "கார்யாணும் காரணம் பூர்வம்" என்று தே₃ஶபரமானபோது அவனுக்கு ப்ரக்ருதி நித்யவிஶேஷணமாகையாலே அத்தை ஜக₃த்காரணமென்றுப்போலே, பரமபத₃ம் அவனுக்கு நித்ய விஶேஷணமாகையாலே பூர்வக்ஷணவர்த்தியாய், பூர்வ காரணமென்னலாம். இத்தால் பரமபத₃த்தினுடைய நித்யதை சொல்லுகிறது. 76. "तदक्षरे परमे व्योमन्" (தத₃க்ஷரே பரமே வ்யோமந்) என்றும், a "கலங்காப் பெருநகரம்" என்றும் சொல்லக்கடவதிறே. (**வசஸாம் வாச்ய முத்தமம்**) லௌகிகமாயும், வைதி₃கமாயுமுள்ள ஸர்வ ஶப்₃த₃ங்களுக்கும் ப்ரதா₄நவாச்யன் ஈஶ்வரன் என்கிறது. 77. "अनेन जीवेनात्मनाऽनुप्रविश्य नामरूपे व्याकरवाणि" (அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி) என்றும், 78. "तत्सृष्ट्वा तदेवानुप्राविशत्" (தத் ஸ்ருஷ்ட்வா ததே₃வாநுப்ராவிஶத்) என்று தொடங்கி, 78. "सत्यञ्चानृतञ्च सत्यमभवत्" (ஸத்யம் சாந்ருதம் ச ஸத்யமப₄வத்) என்றும் சொல்லக்கடவதிறே. 79. "चराचरव्यपाश्रयस्तु स्यात्तद्व्यपदेशो भाक्तस्तद्भावभावित्वात्" (சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத் தத்₃ வ்யபதே₃ஶோ பா₄க்தஸ் தத்₃பா₄வபா₄வித்வாத்) என்கிற ஸூத்ரமும் ப்ரதா₄னதயா வாச்யன் ஈஶ்வரனென்றதிறே. இத்தால் ஸ்ருஷ்டமான பதா₃ர்த்த₂ங்களில் ஆராத்₄யரான

a மூன்-திருவ 51.

தே₃வதைகளோடு ஆராத₄கரான மனுஷ்யரோடு ஆரா த₄நோபகரணங்களான திர்யக்ஸ்த₂ாவரங்களோடு வாசியற ஸர்வாந்தராத்மாவாய் இருக்கிறபடியைச் சொல்லுகிறது. "வசஸாம் வாச்யமுத்தமம்" என்கிறது தே₃ஶபரமானபோது ப்ராத₄ாந்யத்தை லக்ஷிக்கிறது. 76. **"परमे व्योमन्"** (பரமே வ்யோமந்) என்றும், a "தனியுலகு" என்றும் சொல்லக் கடவதிறே. **(யோக₃ாநாம் பரமாம் ஸித்₃தி₄ம்)** என்று ப்ராப்யாந்தர்க₃தமான ஸம்ஸாரவிமோசனத்தை வ்யா வர்த்திக்கிறது. "த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:" (ஶ்லோ-4) என்றதிறே. இத்தால் நிரவதி₄க போ₄ாக்₃யமான திருவடிகளைச் சொல்லுகிறது. b "நலமந்த மில்லதோர் நாடு" என்று தே₃ஶமும் நிரதிஶயபோ₄ாக்₃ய மாயிறே இருப்பது. (தே பரமம் பத₃ம்) ஸர்வகாரணனு மாய், ஸர்வஶப்₃த₃வாச்யனுமாய், ஸர்வோபாய ஸாத்₄யனு மாயிருந்துள்ள உன்னுடைய, ஸர்வாதி₄கமாய், நிரதிஶய போ₄ாக்₃யமான திருவடிகளை என்னுதல்; உன்னுடைய நிரதிஶயபோ₄ாக்₃யமான ஸ்த₂ானத்தை என்னுதல். (விது₃:) ஜ்ஞாநாதி₄கராயிருக்குமவர்கள் அறியாநிற்பர்கள்; நித்ய மாய், ப்ரத₄ாநாத் அதி₄கமாய், நிரதிஶயபோ₄ாக்₃யமாயிருப் பதொரு நாடு உண்டென்றும், அந்த தே₃ஶத்தே 23. **"श्रिया सार्धं जगत्पतिः—आस्ते"**(ஶ்ரியா ஸார்த்த₄ம் ஜக₃த்பதி:-ஆஸ்தே) என்கிறபடியே இருப்பதொரு விக்₃ரஹமுண்டென்றும் அறி வார் ஸகலவேதா₃ந்ததாத்பர்யம் கைப்பட்ட ஸர்வஜ்ஞரிறே. அபேக்ஷிக்கிறவன், தன் சிறுமையைப் பார்த்தும், அவனு டைய நிருபாதி₄கஸ்வாதந்த்ர்யத்தைப் பார்த்தும், அர்த்தி₂ யாதே இங்குத்தை வைலக்ஷண்யத்தைக் கொண்டாடு கிறான், கருத்தறிந்து அங்கே போகவிடுகைக்காக. ஒருத்தன் கையிலே எலுமிச்சம்பழம் இருந்தால், அதன் நன்மையாலே ஒருத்தன் அதைக்கொண்டாடினால் உதா₃ரனானவன் எதிர்த்தலையில் நினைவறிந்து கொடுக்குமா

---

a பெரியாழ்-திரு. 5-4-9. b திருவாய் 2-8-4.

अहं भीतोऽस्मि देवेश! संसारेऽस्मिन् भयावहे।
पाहि मां पुण्डरीकाक्ष! न जाने शरणं परम्॥८॥

8. அஹம் பீ₄தோऽஸ்மி தே₃வேஶ! ஸம்ஸாரேऽஸ்மிந் ப₄யாவஹே ।
பாஹி மாம் புண்ட₃ரீகாக்ஷ! ந ஜாநே ஶரணம் பரம் ॥

போலே. ஸங்க்₃ரஹபக்ஷத்தில் "மஹாபுருஷ" என்கிற பத₃த்தினுடைய வ்யாக்₃யானமாயிருக்கிறது. 7.

8. **பதவுரை :— தே₃வேஶ** — நித்யஸூரிகளுக்குத் தலைவனே!, **ப₄யாவஹே**—ப₄யத்தைக் கொடுக்கும், **அஸ்மிந் ஸம்ஸாரே** — இந்த ஸம்ஸாரத்தில், **அஹம்** — அடியேன், **பீ₄தோऽஸ்மி**—ப₄யப்படாநின்றேன்; **புண்ட₃ரீகாக்ஷ!**—செங்கண்மாலே! **மாம்**—அடியேனை, **பாஹி**—காத்தருள்வாயாக; **பரம் ஶரணம்**—(உன்னைத்தவிர) வேறொரு உபாயத்தை, **ந ஜாநே**—அறிகின்றிலேன்.

அவ:—(அஹம் பீ₄தோऽஸ்மீத்யாதி₃) கீழ் ஶ்லோகத்திலே பரமபத₃த்தில் போ₄க்₃யதையை அனுஸந்தி₄த்தான்; அந்த போ₄க்₃யதானுஸந்தா₄னத்தாலே ஸம்ஸாரத்திலே பொருந்தாதபடியான ப₄யம் பிறந்தது. அந்த ப₄யநிவ்ருத்தியைப் பண்ணியருளவேணுமென்று அபேக்ஷிக்கிறது இஶ்லோகம். ஸம்ஸாரப₄யநிவர்த்தகனிறே ஶரண்யனாவான். ஸம்ஸாரத்தை உள்ளபடி அறிந்தவனுக்கும், ஸம்ஸாரம் ப₄யஸ்தா₂னமாயிருக்கும். ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்தவனுக்கும் அது ப₄யஸ்தா₂நமாயிருக்கும். அவ்வோபாதி ப்ராப்யபூ₄மியில் போ₄க்₃யதையை அனுஸந்தி₄த்தாலும் ப₄யஸ்தா₂னமாயிருக்குமிறே.

வ்யா :— (ப₄யாவஹே அஸ்மிந் ஸம்ஸாரே அஹம்) 'ஸம்ஸாரமாகிறதேது? அது ப₄யாவஹமாயிருக்கிறபடி எங்ஙனே?' என்னில்: அவித்₃யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ங்கள் ஸம்ஸாரமாகிறது. அவித்₃யையாகிறது அஜ்ஞாநம்; அதாகிறது,— புக்க ஶரீரத்தில்

அஹம்பு₃த்₃தி₄யும், ஶரீராநுப₃ந்தி₄யான பதா₃ர்த்த₂த்தில் மமதாபு₃த்₃தி₄யும். 80. "**अनात्मन्यात्मबुद्धिर्या, अस्वे स्वमिति या मतिः**" (அநாத்மந்யாத்மபு₃த்₃தி₄ர் யா, அஸ்வே ஸ்வமிதி யா மதி:) என்ருனிறே ஸ்ரீபராஶரப₄க₃வான். a "யானே என்னை அறியகிலாதே யானே என்றனதே என்றிருந்தேன்" என்றும், பிறர்க்கு உபதே₃ஶிக்கிற இடத்திலும், b "நீர் நுமது" என்றும் அருளிச்செய்தாரிறே ஆழ்வாரும். அஹங்காரம், ஶேஷத்வத்தை அழிக்கையாலே ப₄யாவஹம். மமதை, ப₄க₃வத்₃விஷயத்தில் போ₄க்₃யதையை அழிக்கையாலே ப₄யாவஹம். புண்யபாபரூபமாயாய்த்து கர்மமிருப்பது. பாபம் நரகாத்₃யனுப₄வத்துக்கு ஹேதுவாகையாலே ப₄யாவஹம்; புண்யம் ப₄யாவஹமானபடியென்? என்னில்: புண்யப₂லமாவது ஸ்வர்க்₃காத்₃யனுப₄வங்களிறே. அவை ஸ்வரூபத்தை நஶிப்பிக்கக்கடவ அஹங்காரமமகாரத்தை வர்த்தி₄ப்பிக்கையாலே ப₄யாவஹம்; அநர்த்த₂ஹேதுவான ஶப்₃தா₃தி₃களிலே மூட்டுகையாலே ப₄யாவஹம், தே₃ஹஸம்ப₃ந்த₄ம், ஆதி₄ரூபத்தாலும், வ்யாதி₄ரூபத்தாலும், பரபரிப₄வரூபத்தாலும், ஶீதோஷ்ணாதி₃களாலும் ப₄யாவஹம். இப்படிகளால் ருசிவாஸனைகளும ப₄யாவஹங்கள். எங்ஙனே யென்னில்: ஆதி₃ப₄ரதன் ஸமாதி₄த₃ஶையிலே மானின் பக்கலிலே ருசி பிறந்து மாணுய்ப் பிறந்தானிறே. அதுதனக்கு அடி விஷயாந்தரப்ராவண்யமன்று; ரக்ஷகத்வ வாஸனையாலேயிறே. ஆகையாலே வாஸநாருசிகளும் ப₄யாவஹங்கள். த்₃ருஷ்டிவிஷம்போலே ருசிதானே ப₄யாவஹமாயிருக்கிறபடி. அதாகிறது,—ஸம்ஸாரிகளுக்கு, விட்டில் போலே அஹங்காரத்தை ஆத₃ரித்து மேல்விழுந்து வர்த்திக்கையாலே, காண்கைதானே ப₄யாவஹமாயிருக்குமிறே. 81. "**भूमौ निपात्यमानोऽद्रेरन्तरास्ते स्वपन्निव**" (பூ₄மௌ நிபாத்யமாநோऽத்₃ரேரந்தராஸ்தே ஸ்வபந்நிவ) என்று மலையினின்றும் பூ₄மியில் விழுகிறவன் நடுவே உறங்கு

a திருவாய் 2-9-9. b திருவாய் 1-2-3.

கிருப்போலேயிறே ஸம்ஸாரிகள் வருகிற அநர்த்தத்தைப் பற்றி புத்திபண்ணுதே ஸுகிக்கிறபடி. a "நலமந்த மில்லதோர் நாடு" என்று ஒரு விபூதியாக முற்றடங்கி ஸுகமாயிருக்குமாபோலேயிறே இங்கும் கட்டடங்க பயா வஹமாயிருக்கும்படி. (அஹம் பீதோऽஸ்மி) ஸம்ஸாரத்தை அநந்தக்லேஶபாஜனமாக அனுஸந்தித்த நான் பயப்படா நின்றேன். வர்த்தமானநிர்த்தேஶத்தாலே பயநிவ்ருத்திக்கு ஓர் அவகாஶம காண்கிறிலேன். ஸம்ஸாரத்தில் பயநிவ்ருத் திக்கு அவகாஶமுண்டோ? என்னில: ஈஶ்வரன் பக்கலிலே ந்யஸ்தபரனுயிருக்குமவன் நிர்ப்பயனுயிருக்குமிறே. அதுவும் எனக்கு அபயஸ்தானமாகிறதில்லை. ப்ராப்யத்தில் அதி ப்ராவண்யத்தாலே த்வரை பிறந்தவனுக்கு அத்யவஸாயத் தாலே தரிக்கவொண்ணுதிறே. b "களைகண் மற்றிலேன்" என்றும், c "நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றும் அத்யவஸிதரான ஆழ்வார் d "அந்தமில் பேரின்பத் தடியரோடிருந்தமை" என்று அத்தேஶவிஶேஷத்தில் போக்யதையை ஸாக்ஷாத்கரித்து, அநந்தரம் e "முனியே! நான்முகனே!" என்று கூப்பிட்டாரிறே. (தேவேஶ) f "அயர்வறுமமரர்கள்" என்கிறபடியே நீயும் அவர்களு மாய் அங்கே களித்துத் திரியாநிற்க, அவர்களோபாதி போகத்துக்கும் யோக்யனுயிருக்கிற நான் இங்கே க்லே ஶப் படுகை தேவர்க்குப் போருமோ? பிராட்டியும், பய ஸ்தானமான லங்கையிலே இருந்தவிடத்திலே 82. "हा राम! हा लक्ष्मण!" (ஹா ராம! ஹா லக்ஷ்மண!) என்றுளிறே. g "இமையோர் தலைவா". என்றும், h "விண்ணுளார் பெருமானேயோ" என்றும் அருளிச்செய்தாரிறே ஆழ்வார். (மாம் பாஹி) "யோகானாம் பரமாம் ஸித்திம்" என்கிற படியே அத்தேஶத்தில் போக்யதையை அனுஸந்தித்து மேல்விழுந்த தன்னை. 83. "एहि पश्य शरीराणि" (ஏஹி

a திருவாய் 2-8-4. b திருவாய் 5-8-8. c திருவாய் 5-10-11.
d திருவாய் 10-9-11. e திருவாய் 10-10-1. f திருவாய் 1-1-1.
g திருவிரு-1. h திருவாய் 7-1-5.

कालेष्वपि च सर्वेषु दिक्षु सर्वासु चाच्युत!।
शरीरे च गतौ चापि वर्तते मे महद्भयम्॥ ९॥

9. காலேஷ்வபி ச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸு சாச்யுத!।
ஶரீரே ச கதௌ சாபி வர்த்ததே மே மஹத்பயம்॥

பஶ்ய ஶரீராணி) என்னுமாபோலே வடிவைக் காட்டு கிருன் என்றுமாம். (பாஹி) ஶரீரஸம்பந்தத்தை அறுத்து அர்ச்சிராதிமார்க்கத்தாலே நிர்ப்பயமான தேஶத்திலே கொண்டுபோகவேணும். (புண்டரீகாக்ஷ) உன்னுடைய ஆகர்ஷகமான திருக்கண்களாலே என்னைக் குளிரநோக்கி யருளவேணும். நான் என்னுடைய பயநிவ்ருத்திக்கு யத்னம் பண்ணுமன்றன்ருே நேர்த்தியுள்ளது. தேவர் செய்தருளுமிடத்தில் அநாயாஸமன்ருே. கீழ்ச்சொன்ன ஆஶ்ரயணீயமான வாத்ஸல்யாதிகளும், பலஸித்திக்கு உடலான ஜ்ஞானஶக்த்யாதிகளும் வேணுமோ என்னை ரக்ஷிக்கைக்கு? முதல் "ஜிதந்தே புண்டரீகாக்ஷ" என்று எனக்குப் புறம்புள்ள அந்யபரதையைத் தவிர்த்தாப்போலே பயத்தையும் போக்கி ரக்ஷித்தருளவேணும். (ந ஜாநே ஶரணம் பரம்) "பரம் ஶரணம் ந ஜாநே"; உன்னையொழிய வேருெரு உபாயம் அறிகிறிலேனே. 84. "निदिध्यासितव्यः" (நிதித்யாஸிதவ்ய:) என்று ஶ்ருதிகள் சொன்னலும், 85. "मन्मना भव मद्भक्तः" (மந்மநா பவ மத்பக்த:) என்று ரக்ஷகரான தேவரீர் அருளிச்செய்தாலும், நான் வேருேர் உபாயம் அறிகிலேனே. "அதுக்கு ஹேது என்?' என்னில்: சேதநனேடு அவனுக்கு உபகரணமான கரணங்களோடு வாசியற தேவர் அதீனமாகையாலே. "நமஸ் தே஽ஸ்து" என்றும், "ஹ்ருஷீகேஶ" என்றும் அநுஸந்தித்தவனிறே. 86. "मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च" (மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநம் ச) என்றிறே தேவர் வார்த்தையும். ஸங்க்ரஹபக்ஷத்தில் இஶ்லோகம் "புண்டரீகாக்ஷ" என்கிற பதத்தினுடைய விவரணம். 8.

9. **பதவுரை:— அச்யுத**—அடியவர்களை நழுவவிடாத வனே! **ஸர்வேஷு காலேஷு அபி ச**—எல்லாப் புண்ய காலங்களிலும், **ஸர்வாஸு திக்ஷு ச**—எல்லா திசைகளிலு முள்ள புண்யக்ஷேத்ரங்களிலும், **ஶரீரே ச**—(தர்மஸாதன மான) ஶரீரத்திலும், **கதௌ அபி ச**—ஶரீராந்தரகதியிலும், **மே**—அடியேனுக்கு, **மஹத் பயம்**—அதிகமான பயம், **வர்த்ததே**—உள்ளது.

அவ:— (**காலேஷ்வபி சேத்யாதி**) "ந ஜாநே ஶரணம் பரம்" என்னலாமோ? ஆத்மாவுக்கு உஜ்ஜீவனஹேதுவான உபாயங்களை ஶாஸ்த்ரமுகத்தாலே உண்டாக்கிவைத்து, அதுக்குமேல் அல்பவ்யாபாரத்தினலே ஸகலதுரிதங்களும் நஶிக்கும்படியாகப் புண்யகாலம், புண்யக்ஷேத்ரம் முத லானவற்றை உண்டாக்கி வைத்திலோமோ? வேறு உபா யாந்தரங்களும் உண்டாக அறிகிறிலேன் என்னலாமோ? என்னில்: "அவற்றினுடைய ஸத்பாவத்தை இல்லை என்கிறேனல்லேன்; அவற்றிலே இழிந்த நான் நித்யஸம் ஸாரியான நானகையாலே, முன்பு நின்ற நிலையும் கெடு மென்று சொன்னேன்" என்கிருன். இத்தால், உபாயாந் தரபரித்யாக பூர்வகமாயிருக்கும் ஸித்தோபாயபரிக்ரஹம் என்னுமத்தைச் சொல்லுகிறது. இப்படி நிரபேக்ஷா பாயபூதனிறே ஶரண்யனாவான்.

வ்யா:—(காலேஷ்வபி ச) புண்யமான அயநவிஷ்வாதி களிலும், அவற்றை விஶேஷிக்கிற அர்த்தோதயாதி காலங்களிலும். அதாகிறது— இவ்விலக்ஷணகாலங்களிலே ஸேதுதர்ஶன ஸங்கமங்களிலே பண்ணும் தீர்த்த தானாதிகளைச் சொல்லக்கடவதிறே.87.''**कृतघ्नोऽपि विशुद्ध्यति**'' (க்ருதக்நோऽபி விஶுத்த்யதி)88.' **गोघ्ने चैव सुरापे च चोरे भग्नव्रते तथा। निष्कृतिर्विहिता सद्भिः कृतघ्ने नास्ति निष्कृतिः॥**'' (கோக்நே சைவ ஸுராபே ச சோரே பக்நவ்ரதே ததா। நிஷ்க் ருதிர் விஹிதா ஸத்பி: க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:॥)

என்கிறபடியே ப்ராயஶ்சித்தமில்லை என்கிற க்ருதக்₄ன னுடைய பாபமுட்படப்போமென்றது. (ஸர்வேஷ்வபி) 89. **"अश्वत्थं सिन्धुराजञ्च सदा सेवेत न स्पृशेत्। मन्दवारे स्पृशेत्पूर्वमपरं पर्वणि स्पृशेत्॥"** (அஶ்வத்த₂ம் ஸிந்து₄ராஜம் ச ஸதா₃ ஸேவேத ந ஸ்ப்ருஶேத்। மந்த₃வாரே ஸ்ப்ருஶேத் பூர்வ மபரம் பர்வணி ஸ்ப்ருஶேத்॥) என்று அபர்வணி கடல் தீண்டலாகாது என்னும் நியமமின்றிக்கே ஸர்வகாலமும் ஸேவிக்கலாயிருக்கும் க₃ங்கா₃தி₃ தீர்த்த₂ங்களை ஸமுச்ச யிக்கிறது. (தி₃க்ஷு) ஸகலபாவனங்களாகச் செய்துவைத்த இவையொழிய, 27. **"देशोऽयं सर्वकामधुक्"** (தே₃ஶோऽயம் ஸர்வகாமது₄க்) என்கிறபடியே ப்ரத₂மத்திலே பாவனமாய், பின்பு ப₄க₃வத்ப்ராப்திக்கு ஸாத₄னமுமாய், பின்பு போ₄க்₃யமுமாயிருக்கும் புண்யதே₃ஶம் முதலான தே₃ஶங்களை ஸமுச்சயிக்கிறது. 90. **"मथुरा नाम नगरी पुण्या पापहरी शुभा"** (மது₂ரா நாம நக₃ரீ புண்யா பாபஹரீ ஶுப₄ா) என்னக்கடவதிறே. (ஸர்வாஸு ச) இத்தால் — அவதரித்தருளின தே₃ஶங்களையொழிய ப₄க₃வத்ஸந்நிதி₄ மாருத ஸாளக்₃ராமமண்ட₃லம் முதலான தே₃ஶங்களை ஸமுச்சயிக்கிறது. (ஶரீரே ச) கீழ்ச்சொன்ன தே₃ஶங்களில் பண்ணும் உபாயாநுஷ்ட₂ானத்துக்காக 91. **"शरीरमाद्यं खलु धर्मसाधनं"** (ஶரீரமாத்₃யம் க₂லு த₄ர்ம ஸாத₄நம்) என்றும், 92. **"विचित्रा देहसंपत्तिरीश्वराय निवेदितुम्"** (விசித்ரா தே₃ஹஸம்பத்திரீஶ்வராய நிவேதி₃தும்) என்றும் சொல்லப்படுகிற இந்த ஶரீரம் எனக்கு வ்யர்த்த₂ மாகாநின்றதாகை. (க₃தெள ச) 93. **"स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः"** (ஸ்வத₄ர்மே நித₄நம் ஶ்ரேய: பரத₄ர்மோ ப₄யாவஹ:) என்கிறபடியே, ஸாத₄நாநுஷ்ட₂ானமத்₄யே மரணமுண்டானாலும், ஶரீராந்தரத்திலே தலைக்கட்டும்படி யான ஶரீராந்தரக₃தியும் எனக்கு வ்யர்த்த₂ம். (க₃தெள) ஶரீராந்தரக₃தெள. 'அபி'ஶப்₃த₃த்தாலே அநுஷ்டே₂ய மான கர்ம ஜ்ஞான ப₄க்த்யாதி₃களைச் சொல்லிற்று என்னு தல்; முன்பு போன ஶரீரங்களை ஸமுச்சயிக்கிறது என்னு

தல். முன்பு பரிக்₃ரஹித்துப் பொகட்ட ஶரீரங்கள் வ்யர்த்த₂மானவோபாதி வர்த்தமான ஶரீரமும் வ்யர்த்த₂மென்று கருத்து. (**மே மஹத்₃ப₄யம்**) இவை வ்யர்த்த₂மான அளவேயல்ல. தே₃ஶ கால ஶரீரங்களிலும், இவற்றைப் பற்றிநின்று அனுஷ்டி₂க்கும் கர்மயோகா₃த்₃யுபாயங்களிலும் ப₄யம் வர்த்தியாநின்றது. 'ப₄யம் வர்த்திப்பானென்?' என்னில்: முன்பு தேவர் திருவடிகளை உபாயமாகப் பற்றி வர்த்திக்கையாலே, தேவருடைய இரக்கமும் கெடுமென்று இவை ப₄யாவஹமாகாநின்றன. 'அனுகூலமானவை ப₄யஸ்த₂ானமாவானென்?' என்னில்: ஸ்வீகரித்த உபாயம் வேறொன்றை ஸஹியாமையாலே. முதலிலே "த்வாமேவ ஶரணம் ப்ராப்ய" (ஶ்லோ-4) என்றவனிறே; 94. **"तमेव"** (**தமேவ**) என்றிறே ஶாஸ்த்ரவித₄ாநமும்; 95. **"मामेकं"** (**மாமேகம்**) என்றிறே ஶரண்யனுடைய வாக்யமும். (**மஹத் ப₄யம் வர்த்ததே**) "ப₄யாவஹே" (ஶ்லோ-8) என்கிற ஸம்ஸாரப₄யத்தளவன்று இந்த ப₄யம். விஷயாந்தரப்ராவண்யத்தால் வந்த ப₄யத்தளவன்றிறே ஸாத₄நாந்தராநுஷ்ட₂ானத்தால் வந்த ப₄யம் என்கை. விஷயாந்தர ப்ராவண்யத்தால் வந்த ப₄யத்துக்கு ஈஶ்வரன் க்ருபையைப் பற்றலாம். அத்தையும் நழுவும்படி பண்ணுகிறதிறே ஸாத₄நாந்தரபரிக்₃ரஹம். (**அச்யுத**) இப்படி ஸர்வோபாயஶூந்யராயிருப்பாரையும் நழுவவிடாத ஸ்வப₄ாவத்தாலேயிறே தேவர்க்கு "அச்யுத:" என்கிற திருநாமம் உண்டாயிற்று. "யஸ்மாத் ப்ராப்தா ந ச்யவந்தே, ஸோऽச்யுத:" என்றிறே திருநாமத்துக்கு நிர்வாஹம், 96. **"द्वारकानिलयाच्युत !"** (**த்₃வாரகாநிலயாச்யுத!**) என்று தேவரை விஶ்வஸித்துக் கையை விட்டவளை அத்த₂ஶையில் விடாதவரிறே தேவர். 97. **"त्वत्प्रसादान्मयाच्युत !"** (த்வத்ப்ரஸாத₃ாந் மயாச்யுத!) என்று சொல்லக்கடவதிறே. ஸர்வஸங்க்₃ரஹபக்ஷத்தில் "நமஸ்தே" என்கிற பத₃த்துக்கு ஶேஷமாகக்கடவது. அந்த ப்ரபத₃னமும் உபாயாந்தரநிவ்ருத்திபூர்வகமாகையாலே. 9.

त्वत्पादकमलादन्यन्न मे जन्मान्तरेष्वपि।
निमित्तं कुशलस्यास्ति येन गच्छामि सद्गतिम्॥१०॥

10. த்வத்பாத₃கமலாத₃ந்யந்ந மே ஜந்மாந்தரேஷ்வபி।
நிமித்தம் குஶலஸ்யா஽ஸ்தி யேந க₃ச்ச₂ாமி ஸத்₃க₃திம்॥

---

10. பதவுரை:— **யேந**—எந்த உபாயத்தினால், **ஸத்₃க₃திம்**—நற்கதியை, **க₃ச்ச₂ாமி**—அடியேன் அடைவேனோ, **தஸ்ய குஶலஸ்ய**—அப்படிப்பட்ட உபாயத்துக்கு, **நிமித்தம்**—காரணமான ப்ரத₂மஸுக்ருதம், **த்வத் பாத₃ கமலாத் அந்யத்**—உம்முடைய திருவடித் தாமரைகளிற்காட்டிலும் வேறான து, **மே**—அடியேனுக்கு, **ஜந்மாந்தரேஷ்வபி நாஸ்தி**—எப்பிறப்பிலும் இல்லை.

அவ:-(த்வத்பாத₃கமலாதி₃த்யாதி₃) "உபாயோபேயங்கள் இரண்டும் நாமேயானாலும், அநாதி₃காலம் இப்படி விஷய ப்ரவணனாய் நம் பக்கலிலே விமுக₂னாய்ப்போந்த ஸம்ஸாரிக்கு விஷயவைமுக்₂யபூர்வகமாக நம் பக்கலிலே ஆபி₄முக்₂யம் பிறக்கைக்கு அடியான ப்ரத₂மஸுக்ருதம் இவன் தலையிலே ஆகவேண்டாவோ? இஸ்ஸுக்ருதத்தாலே ஆபி₄முக்₂யம் பிறந்தால் பின்பன்றோ யதா₂ர்த்த₂ஜ்ஞானம் பிறப்பது? அந்த ஜ்ஞானத்தாலேயன்றோ த்யாஜ்யோபாதே₃ய விபா₄க₃ம் பிறப்பது? த்யாஜ்யநிவ்ருத்திபூர்வகமான ப்ராப்யஸித்₃தி₄க்கு உபாயம் அபேக்ஷிதமாவது பின்பன்றோ? அத்தாலேயன்றோ ப்ராப்யஸித்₃தி₄? இதெல்லாத்துக்கும் அடியான ப்ரத₂ம ஸுக்ருதம் இவன் கையாலே ஆகவேண்டாவோ?" என்னில்: "அந்த ஸுக்ருதமும் தேவர் திருவடிகளே; எனக்கு வேறில்லை" என்கிறது. ப்ராப்யப்ராபகங்கள் அவனே யென்று கீழ் உக்தமான அர்த்த₂த்தை நிக₃மிக்கிறது என்னவுமாம். "தவ சரணத்₃வந்த்₃வம் வ்ரஜாமி" என்றும், "யோக₃ாநாம் பரமாம் ஸித்₃தி₄ம் பரமம் தே பத₃ம் விது₃:" என்றும் ப்ராப்யப்ராபகங்கள் கீழே உக்தமிறே.

வ்யா:— (த்வத்பாத₃கமலாத₃ந்யத் குஶலஸ்ய நிமித்தம் மே நாஸ்தி) தேவர் திருவடிகள் ப்ராப்யமுமாய், ப்ராபகமுமானவோபாதி ப்ரத₂மஸுக்ருதமும் எனக்கு தேவர் திருவடிகளையொழிய வேறில்லை. "த்வத₃ந்யத் குஶலஸ்ய நிமித்தம் மே நாஸ்தி" என்னவுமாயிருக்க, "பாத₃ கமலம்" என்கிற பத₃த்₃வயங்கள் ப்ராப்யப்ராபகங்களை ஸ்மரிப்பிக்கின்றன. கமலபத₃ம் போ₄க்₃யதையை ஸ்மரிப்பிக்கிறவோபாதி பாத₃பத₃ம் உபாயத்தை ஸ்மரிப்பிக்கிறது. "சரணத்₃வந்த்₃வம் ஶரணம் வ்ரஜாமி" என்று திருவடிகளையிறே உபாயமாகச் சொல்லிற்று. (குஶலஸ்ய நிமித்தம்) மங்க₃ளரூபமான உபாயஸித்₃தி₄க்கு ஹேதுவான ப்ரத₂மஸுக்ருதம். சேதனனுக்கு மங்க₃ளரூபமாயிறே இவ்வுபாயம் ரஸித்திருப்பது. 98. "बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते" (ப₃ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்₃யதே) என்கிறபடியே உபாயஸித்₃தி₄ஹேதுவாய், அநேக ஜன்மஸுக்ருதஸாத்₄யமாயிருக்கிற ப₄க₃வத்₃ ஜ்ஞானமாகிற ப்ரத₂மஸுக்ருதம் "த்வத்பாத₃கமலாத₃ந்யந்நாஸ்தி" என்னக்கடவதோ? என்னில்: (மே நாஸ்தி) *அஜ்ஞாநியானாலும் எனக்குத் திருவடியொழிய வேறில்லை. 'அதுவென்?' என்னில்: ஸுக்ருத கார்யமாவது ஶப்₃தா₃தி₃விஷயப்ராவண்யத்தினின்றும் மீட்டு இவ்வாத்மாவுக்கு ப₄க₃வதா₃பி₄முக்₂யத்தைப் பிறப்பிக்கையிறே அது. "ஜிதந்தே புண்ட₃ரீகாக்ஷ" என்கிறபடியே, இவ்வர்த்த₂ம் தேவர் அழகாலே பிறந்த பின்பு, அந்த ஸுக்ருதம் எனக்கு தேவர் திருவடிகளே. (ஜந்மாந்தரேஷ்வபி) அழகைக் காட்டி மீட்டதுவும், ஜந்மாந்தரங்களில் ஒரு ஸுக்ருதவிஶேஷம் உண்டாய், அதன் ப₂லமாஞலோவென்னில்: விஷயப்ரவணனை மீட்கைக்கு ஒரு ஸுக்ருதாபேக்ஷை இல்லாமையாலே, அதுவும் வேண்டுவதில்லை. ३"என் ஆவியை நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனை" என்று ஆழ்வார் அருளிச்செய்ததுக்கும்

---

* அஜ்ஞாநி - அந்த ஜ்ஞாநி ३ திருவாய் 1-7-5.

विज्ञानं यदिदं प्राप्तं यदिदं स्थानमार्जितम्।
जन्मान्तरेऽपि मे देव! माभूत्तस्य परिक्षयः॥ ११॥

11. விஜ்ஞாநம் யதி₃த₃ம் ப்ராப்தம் யதி₃த₃ம் ஸ்த₂ாநமார்ஜிதம்।
ஜந்மாந்தரேऽபி மே தே₃வ மாபூ₄த் தஸ்ய பரிக்ஷய:॥

அடி இதுவிறே. (யேந குஶலேந ஸத்₃க₃திம் க₃ச்ச₂ாமி) ஸத்₃க₃தி என்கிறது விலக்ஷணமான ப்ராப்யம். அதாவது:— "யோக₃ாநாம் பரமாம் ஸித்₃தி₄ம் பரமம் தே பத₃ம் விது₃:" என்கிற பரமபத₃ம். "யேந குஶலேந ஸத்₃க₃திம் க₃ச்ச₂ாமி, தஸ்ய குஶலஸ்ய நிமித்தம் ஜந்மாந்தரேஷ்வபி த்வத்பாத₃கமலாத₃ந்யத் மே நாஸ்தி" என்று அந்வயம். நிக₃மனபே₄த₃த்திலே "யேந உபாயேந ஸத்₃க₃திம் க₃ச்ச₂ாமி, தஸ்ய தத்₃க₃திரூபஸ்ய ஹேதுபூ₄தம் உபாயம் ஜந்மாந்தரேஷ்வபி த்வத்பாத₃கமலாத₃ந்யத் மே நாஸ்தி" என்றபடி. ஸங்க்₃ரஹபக்ஷத்தில் "பூர்வஜ" என்கிற பத₃த்தினுடைய விவரணமாயிருக்கிறது. 10.

11. பதவுரை:— தே₃வ—எம்பிரானே! மே—அடியேனுக்கு, யத் இத₃ம் விஜ்ஞாநம்—(நீயே உபாயமும் உபேயமும் என்கிற) யாதொரு ஜ்ஞானமானது, ப்ராப்தம்—கிடைத்திருக்கிறதோ, யத் இத₃ம் ஸ்த₂ாநம்—(இந்த ஜ்ஞான விஷயமான அத்₄யவஸாயமாகிற) யாதொரு நிலை, ஆர்ஜிதம்—(அடியேனால்) ஸம்பாதி₃க்கப்பட்டிருக்கிறதோ, தஸ்ய—அவற்றுக்கு, பரிக்ஷய:—குறைவானது, ஜந்மாந்தரே அபி—எப்பிறப்பிலும், மாபூ₄த்—ஏற்படவேண்டாம்.

அவ:— (விஜ்ஞாநமித்யாதி₃) "ப்ராப்யப்ராபகங்களும், அதுக்கு அடியான ஸுக்ருதமும் நாமேயாகிலும் உபாய பூ₄தனை நான் மேலே செய்யவேண்டுவதென்?" என்னில்; "பிறந்த விஜ்ஞானமும், ஜ்ஞானமடியாகப் பிறந்த அத்₄யவஸாயமும் நஶியாதொழியப்பெறில் 'யோக₃ாநாம் பரமாம் ஸித்₃தி₄ம் பரமம் தே பத₃ம் விது₃:' என்கிற ப்ராப்ய பூ₄மியிலே போகவும் வேண்டா; ப₄யாவஹமான ஸம்ஸார

நிவ்ருத்தியும் வேண்டா; எனக்கு என்றுமொக்க இதுவே அமையும்" என்கிறது.

வ்யா:—(விஜ்ஞாநம்) விலக்ஷணமான ஜ்ஞானம்; ஸர்வாதி₄கமான ப்ராப்யவிஷயமாகவும், ஸர்வாதி₄கமான ப்ராபகவிஷயமாகவும் பிறந்த ஜ்ஞானம். ப்ராப்யங்களில் ப₄க₃வத் ப்ராப்திக்கு அவ்வருகாயிருப்பதொரு ப்ராப்யமில்லாதாப்போலே ஸாத₄னங்களிலும் ஸித்₃தோ₄பாயத்துக்கு அவ்வருகாயிருப்பதொன்று இல்லையிறே. (**யதி₃த₃ம் விஜ்ஞாநம்**) ப்ரமாண ஸித்₃த₄முமாய், ஹ்ருத₃யகமலத்திலே ஸங்நிஹிதமுமாயிருக்கிற ஜ்ஞானம். வேதா₃ந்தங்களிலே ப்ராப்யமும், ப்ராபகமும் ஈஶ்வரனேயென்று ப்ரஸித்₃த₄மிறே. 99. "**आनन्दमयः**" (ஆநந்த₃மய:) என்றும், 100. "**रसो वै सः**" (ரஸோ வை ஸ:) என்றும், 101. "**सर्वगन्धस्सर्वरसः**" (ஸர்வக₃ந்த₄ஸ் ஸர்வரஸ:) என்றும் ப்ராப்யமாக ப்ரஸித்₃த₄மிறே. 43. "**यो ब्रह्माणं विदधाति पूर्वं**" (யோ ப்₃ரஹ்மாணம் வித₃தா₄தி பூர்வம்) என்று தொடங்கி, 43. "**मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये**" (முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்₃யே) என்றும், 102. "**तस्मान्न्यासमेषां तपसामतिरिक्तमाहुः**" (தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:) என்றும், 100. "**एष ह्येवानन्दयाति**" (ஏஷ ஹ்யேவாநந்த₃யாதி) என்றும் உபாயமாகவும் ப்ரஸித்₃த₄மிறே. (**ப்ராப்தம்**) ப்ரயோஜநாந்தரபரர்க்கும் ஸாத₄நாந்தரநிஷ்டர்க்கும் உட்பட உன்னாலே ப்ராபிக்கப்பட்டது. (**யதி₃த₃ம் ஸ்தா₂நமார்ஜிதம்**) ஸ்தா₂நம் என்று ஸ்தி₂தி; அதாகிறது:—இந்த ஜ்ஞாந விஷயமான அத்₄யவஸாயம். (**யதி₃த₃ம்**) என்று ப்ரதே₃ஶாந்தரத்தில் ப்ரஸித்₃தி₄யையும், ஸ்வஹ்ருத₃ய ஸந்நிதி₄யையும் சொல்லுகிறது. 106. "**व्यवसायादृते ब्रह्मन्! नासादयति तत्परम्**" (வ்யவஸாயாத்₃ருதே ப்₃ரஹ்மந்! நாஸாத₃யதி தத்பரம்) என்னக்கடவதிறே. a"நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றாரிறே ஆழ்வாரும். (**ஆர்ஜிதம்**) ப₄க₃வத் ப்ரஸாத₃ ஸித்₃த₄மாகையாலே ஜ்ஞானத்தை

a திருவாய் 5-10-11.

ப்ராப்தமென்கிறது. அதி₄காரிவிஶேஷணமாய், ஈஶ்வரனை அர்த்தி₂த்தே நாம் புருஷார்த்த₂மாகப் பெறவேண்டுவ தொன்றாகையாலே அத்₄யவஸாயத்தை ஆர்ஜிக்கப்பட்டது என்கிறது. (ஜந்மாந்தரேऽபி) இஜ்ஜந்மம் நஶித்தாலும், இந்த ஜ்ஞாநாத்₄யவஸாயங்கள் நஶியாதொழியவேணும் என்கிறது. 'இத்தைப் புருஷார்த்த₂மாக அபேக்ஷிப்பா ரைக் கண்டறியோமே' என்ன: (மே) எனக்கு இதுவே புருஷார்த்த₂ம்; தாம் தாம் அர்த்தி₂த்ததன்றோ புருஷார்த்த₂ மாவது. (தே₃வ) 'அர்த்தி₂ப்பார் உண்டானாலும் நாம் புருஷார்த்த₂மாகக் கொடுத்துப் போருவதொன்றன்றே' என்ன: (தே₃வ) ஸம்ஸாரிகளைப்போலே என்னைக்கொண்டு அறியாதொழியவேணும். லீலாரஸம் அனுப₄விக்கைக்கு விஷயபூ₄தர் ஸம்ஸாரிகளன்றோ. (தஸ்ய) ஜ்ஞாநாத்₄ய வஸாயங்களுக்குண்டான ஐககண்ட்₂யத்தாலே, ஏகவசநத் தாலே சொல்லுகிறது. (பரிக்ஷயோ மாபூ₄த்) ஜ்ஞானத் துக்குப் பரிக்ஷயமாகிறது விஸ்ம்ருதி. அத்₄யவஸாயத்துக்குப் பரிக்ஷயமாகிறது விநாஶம். ஜ்ஞாநவிஸ்ரம்ப₄ங்களுக்கு விஸ்ம்ருதி விநாஶமின்றிக்கே ஒழியவேணும் என்கிறது. கீழ் பரமபத₃த்தே கொடுபோகவேணுமென்று அபேக்ஷித் தும், ப₄யாவஹமான ஸம்ஸாரத்தைத் தவிர்த்துத் தரவேணு மென்று அபேக்ஷித்தும் வைத்து, ஜ்ஞாநாத்₄யவஸாயங்களே அமையுமென்றேன் என்றது இவற்றினுடைய ரஸ்யதை யாலே. உபகாரஸ்ம்ருதியாலே ஆசார்யன்பக்கல் பிறந்த போ₄க்₂யதாதிஶயத்தாலே a "தேவு மற்றறியேன்" என் னப் பண்ணிற்றிறே. ஸம்ஸாரிகளை த₃ர்ஶித்தால் ஜ்ஞா நாத்₄யவஸாயங்கள் முக்தப்ராப்யஸ்த₂லம் போலேயிறே இருப்பது. b "மேலால் பிறப்பின்மை பெற்று அடிக்கீழ்க் குற்றேவலன்று மறப்பின்மை – யான் வேண்டும் மாடு" என்னும் ஆழ்வாருடைய வார்த்தைக்கும் அடி இதுவிறே. ஸங்க்₃ரஹபக்ஷத்தில் இஶ்லோகம் "நமஸ்தே" என்கிற பத₃த்தை ஸ்மரித்துக் கிடக்கிறது. 11.

---

a கண்ணிநுண்சிறுத்தாம்பு-2. b பெரியதிருவ-58.

दुर्गतावपि जातायां त्वद्गतो मे मनोरथः।
यदि नाशं न विन्देत तावताऽस्मि कृती सदा॥१२॥

12. துர்க்கதாவபி ஜாதாயாம் த்வத்கதோ மே மநோரத:।
யதி நாசம் ந விந்தேத தாவதாऽஸ்மி க்ருதீ ஸதா॥

12. பதவுரை:—த்வத் கத:—தேவரீரிடத்தில் ஈடுபட்டிருக்கிற, மே—என்னுடைய, மநோரத:—மநோரதமானது, துர்க்கதௌ ஜாதாயாம் அபி—மிகவும் கீழான நிலை ஏற்பட்டபோதிலும், நாசம் ந விந்தேத யதி—அழியாதிருக்குமேயாகில், தாவதா—அவ்வளவாலே, ஸதா—எப்பொழுதும், க்ருதீ அஸ்மி— க்ருதக்ருத்யனுயிருக்கிறேன்.

அவ:—(துர்க்கதாவபீத்யாதி) து:க்கரூபமான ஸம்ஸார நிவ்ருத்தியும், ஸுகரூபமான தேசப்ராப்தியும் வேண்டா; அதிகாரிவிசேஷணமான ஜ்ஞாந விஸ்ரம்ப ஸித்தியாலே புருஷார்த்தம் தலைக்கட்டிற்றுமோ? இன்னும் "ஜந்மாந்தரேऽபி" என்று பகவத்ப்ராப்தி விரோதியான ஜந்மத்தை அநுமதி பண்ணுகையும் விருத்தமன்றோ? என்னில்: 'கீழ் அபேக்ஷித்தவை ஒன்றும் வேண்டா; ஸம்ஸாரியுமாய், அது தன்னிலும் துர்க்கதியுமாய்ச் செல்லாநிற்கிலும், தேவர் திருவடிகளில் உபாயோபேயங்கள் முதலான ஸகலலாபங்களும் கிடையாதே மநோரதமாத்ரமேயாகிலும், ஸ்வவசர் போலே என்றுமொக்க க்ருதக்ருத்யனுகாநின்றேன்' என்கிறது.

வ்யா:—(துர்க்கதாவபி ஜாதாயாம்) துர்க்கதியாவது:—மநஸ்ஸையொழிய இதர கரணங்கள் உதவாத தசை. அதாகிறது:— அசக்தியாலே a"ஐயார் கண்டமடைக்கிலும்" என்கிற உத்க்ரமணதசையிலும், ஸ்வாபத்தாலே பாஹ்யகரணங்களடங்க உபஸம்ஹ்ருதமான ஸ்வப்நதசையிலும். இத்தசையிலேயாய்ச் செல்லாநின்றாலும். (த்வத்கத:) ஸ்வரூபரூபகுணவிபூதிகளெல்லாம் தனித்தனியேயாகப் பரமமான தேவர் திருவடிகளிலே அடையப்

a திருவாய் 2-9-3.

பட்ட மநோரத₂மாத்ரமென்கை. **(மே மநோரத₂:)** இழிந்த துறையிலே சபலனுமாய், அவ்வருகு போ₄க₃க்ஷமனன்றிக்கே இருக்கிற என்னுடைய மநோரத₂ம். மநோரத₂மாவது:—அபேக்ஷிதமான புருஷார்த்த₂ம் ஸித்₃தி₄யாதொழிந்தாலும், அதில் நசையாலே அவற்றை எண்ணுகிற்கை. 'ஸித்₃தி₄யின்றிக்கேயிருக்க மநோரத₂மாத்ரமே புருஷார்த்த₂மாகக்கூடுமோ ?' என்னில்: ஊர்வசியோடே அனுப₄வித்துப் புண்யக்ஷயத்தாலே விஶ்லேஷித்துப் போந்தவனுக்கு, வேறு சில விஷயங்களை அனுப₄வயோக்₃யமாக்கினாலும், அவற்றில் நெஞ்சு செல்லாதே, அவள்தன்னையே நினைத்திருக்கை புருஷார்த்த₂மாமாபோலே இதுவும் கூடும். அவிலக்ஷணவிஷயத்தில் போ₄க₃ங்களைக்காட்டில் விலக்ஷண விஷயத்தில் மநோரத₂மாத்ரமே ரஸிக்குமிறே. ப₄க₃வத்₃ விஷயத்தில் மநோரத₂மாவது:— **104. "पिता त्वं माता त्वं"** (பிதா த்வம் மாதா த்வம்) என்கிறபடியே ஸர்வவித₄ப₃ந்து₄வும் அவனேயாகவேணுமென்றும், a 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்' அவனேயாகவேணுமென்றும், அவனைப் பெறுகைக்கு உபாயம் அவனேயாகவேணுமென்றும் இவையிறே. **(யதி₃ நாஶம் ந விந்தே₃த)** இம்மநோரத₂ம் விஷயாந்தரஸம்ஸர்க்க₃த்தாலே விச்சே₂த₃த்தை அடையாதாகில். 'யதி₃' என்கிறது விஷயாந்தரங்கள் ஸாம்ராஜ்யம் பண்ணுகிற ஸம்ஸாரத்தில் ப₄க₃வந்மநோரத₂த்துக்கு விச்சே₂த₃மின்றிக்கேயொழிகையாகிற இது கிடைப்பதொன்றன்றிறே. ஒரு தே₃ஶலாப₄த்தாலே வந்த ஸுக₂ஸித்₃தி₄யோபாதியும், ஸாம்ஸாரிகமான து₃:க்க₂நிவ்ருத்தியோபாதியும், ஜ்ஞாநஸித்₃தி₄யோபாதியும், இம்மநோரத₂ஸித்₃தி₄யும் ப₄க₃வத்ப்ரஸாதா₃யத்தம் என்று கருத்து. **(தாவதாऽஸ்மி க்ருதீ ஸதா₃)** இம்மநோரத₂மாத்ரத்தாலே க்ருதக்ருத்யனாகாநின்றேன்; என்றுமொக்க க்ருதக்ருத்யனாகாநின்றேன். ஸ்வஸ்த₂ஶரீரனான போதோடு ருக்₃ணஶரீரனான போதோடு

---

a திருவாய் 6-7-1.

வாசியற 105. "आसीना वा शयाना वा तिष्ठन्तो यत्र कुत्र वा" (ஆஸீநா வா ஶயாநா வா திஷ்டந்தோ யத்ர குத்ர வா) என்கிற ந்யாயத்தாலே ஸ்தி₂திஶயநாத்₃யவஸ்தா₂ விஶேஷங்களோடு ஜன்மாந்தரங்களோடு வாசியற ப்ராப்ய ஸித்₃தி₄யிற்போலே இம்மநோரத₂ஸித்₃தி₄மாத்ரத்தாலே க்ருதக்ருத்யனுகாநின்றேன் என்கை. கீழ் ஶ்லோகத்தில் ப்ராப்யஸித்₃தி₄யில் ஸாரஸ்யம் போலே ஜ்ஞானமாத்ரமே ரஸிக்கும் என்கிறது. இதில் 'அந்த ஸித்₃தி₄யும் வேண்டா; தத்ஸித்₃த்₄யர்த்த₂மான மநோரத₂மாத்ரமே அமையும்' என்று அந்த ஸாரஸ்யத்தினுடைய எல்லையைச் சொல்லுகிறது. ஸ்மர்த்தவ்யவிஷயஸாரஸ்யமிறே ஸ்ம்ருதிக்கு ஸாரஸ்யம். ஆகையாலே, ஸ்மர்த்தவ்யப₄க₃வத்₃விஷய ஸாரஸ்யத்தினுடைய அவதி₄யில்லாமையைச் சொல்லிற்றாய்த்து. a "நினைந்தென்னுள்ளே நின்று நெக்குக் கண்கள் அசும்பொழுக, நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன் நேமி நெடியவனே" என்று பெரியாழ்வார் அருளிச்செய்ததற்கு முதல் இதுவேயிறே. 106. "नाहन्तु सख्यो भजतोऽपि जन्तून् भजाम्यमीषामनुवृत्तिवृत्तये। यथाऽधनो लब्धधने विनष्टे तच्चिन्तयान्यन्निभृतो न वेद॥ एवं मदर्थोज्झितलोकवेदस्वानां हि वो मय्यनुवृत्तयेऽबलाः। मया परोक्षं भजता तिरोहितं मासूयितुं मार्हथ तत्प्रियं प्रियाः॥ न पारयेऽहं निरवद्यसंयुजां सुसाधु कर्तुं विबुधायुषाऽपि वः। या मा भजन् दुर्जरगेह-शृङ्खलां संवृश्च्य तद्वः प्रतियातु साऽधुना॥" (நாஹம் து ஸக்₂யோ ப₄ஜதோऽபி ஜந்தூந் ப₄ஜாம்யமீஷாமநுவ்ருத்திவ்ருத்தயே। யதா₂ऽத₄நோ லப்₃த₄த₄நே விநஷ்டே தச்சிந்தயாந்யந் நிப்₄ருதோ ந வேத₃॥ ஏவம் மத₃ர்த்தோ₂ஜ்ஜி₂தலோகவேத₃ ஸ்வாநாம் ஹி வோ மய்யநுவ்ருத்தயேऽப₃லா:। மயா பரோக்ஷம் ப₄ஜதா திரோஹிதம் மாஸூயிதும் மார்ஹத₂ தத் ப்ரியம் ப்ரியா:। ந பாரயேऽஹம் நிரவத்₃யஸம்யுஜாம் ஸுஸாது₄ கர்த்தும் விபு₃தா₄யுஷாऽபி வ:। யா மா ப₄ஜந் து₃ர்ஜரகே₃ஹஶ்ருங்க₂லாம் ஸம்வ்ருஶ்ச்ய தத்₃ வ: ப்ரதியாது ஸாऽது₄நா॥) என்றிறே ஶேஷிவார்த்தையும். 12.

a பெரியாழ்-திரு 5-4-8.

न कामकलुषं चित्तं मम ते पादयोः स्थितम् ।
कामये वैष्णवत्वं तु सर्वजन्मसु केवलम् ॥ १३ ॥

13. ந காமகலுஷம் சித்தம் மம தே பாத₃யோஸ்ஸ்தி₂தம் ।
காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வஜந்மஸு கேவலம் ॥

---

13. **பதவுரை:**— **தே**—தேவரீருடைய, **பாத₃யோ:**— திருவடிகளில், **ஸ்தி₂தம்**—நிலைநின்ற, **மம சித்தம்**—அடியேனுடைய மனம், **காம கலுஷம் ந**—மற்ற ஆசைகளினுல் கலங்கவில்லை; **ஸர்வ ஜந்மஸு**—எல்லாப் பிறப்புகளிலும், **வைஷ்ணவத்வம் து கேவலம்** — வைஷ்ணவனுயிருக்கும் தன்மையை மட்டுமே, **காமயே**—ஆசைப்படுகிறேன்.

அவ:— (ந காமகலுஷமித்யாதி₃) இஸ்லோகத்தால் நான் உனக்கேயாயிருக்கும் பாரதந்த்ர்யஸுக₂மே எனக்கு ப்ராப்யமென்கிறது. "கீழே, பரமபத₃த்தை ப்ராப்யமென்றும், ஸம்ஸாரப₄யத்தைப் போக்கித்தரவேண்டுமென்றும், 'இவை ஒன்றும் வேண்டா, ஜ்ஞானமே அமையும்' என்றும், 'அதுதானும் வேண்டா; மநோரத₂மாத்ரமே அமையும்' என்றும், ப்ராப்யவிரோதி₄யான ஜன்மத்தை அனுமதி பண்ணியும் இப்படி வ்யாஹதபா₄ஷணம் பண்ணிற்றென்? ஒன்றே புருஷார்த்த₂மாக நிர்ணயித்து அபேக்ஷிக்கவேண்டாவோ?" என்னில்: "அவை வ்யாஹத பா₄ஷணமல்ல; அடிமைக்கு ஏகாந்ததே₃ஶமான பரமபத₃த்தை ஆசைப்பட்டேன்; அடிமைக்கு விரோதி₄யென்று ஸம்ஸாரத்தை வேண்டாமென்கிறது; உன்னுடைய போ₄க்₃யதாதிஶயத்தாலே த்வத்₃விஷயஜ்ஞானமே அமையுமென்றேன்; ஜந்மத்தை இசைந்ததும் ஜ்ஞானத்தினுடைய ஸாரஸ்யாதிஶயத்தாலே; இவையெல்லாம் ப்ராஸங்கி₃கம்; முதலிலே 'நமஸ்தேऽஸ்து' என்று சொன்ன பாரதந்த்ர்ய ஸுக₂மே எனக்குக் காமவிஷயம்" என்று புருஷார்த்த₂த்தை நிர்ணயித்துத் தலைக்கட்டுகிறது.

வ்யா:— (தே பாத₃யோ: ஸ்தி₂தம் மம சித்தம் ந காம கலுஷம்) நிருபாதி₄கஶேஷியாய், நிரதிஶயபோ₄க்₃யனு யிருந்துள்ள உன்னுடைய திருவடிகளிலே ஸ்தி₂தமான என்னுடைய சித்தம் வேறொன்றை ஸ்வயம் புருஷார்த்த₂ மாக நினைத்துக் கலங்குகிறதன்று. "ஜிதம் தே புண்ட₃ரீ காக்ஷ" என்கிறபடியே நான் இருந்தவிடத்தே வந்து முகம் காட்டி, ருசியைப் பிறப்பித்துப் புகுரநிறுத்தினபடி யாலே நிருபாதி₄கஶேஷித்வமும், நிரதிஶயபோ₄க்₃யத்வமும் எனக்கு அனுபூ₄தமிறே. (ஸ்தி₂தம்) ஸம்ஸ்தி₂தம். 107. "यस्याऽस्मि" (யஸ்யாऽஸ்மி) என்கிறபடியே வந்தேறியன் றிக்கே, 108. "गुणैर्दास्यमुपागतः" (கு₃ணைர்தா₃ஸ்யமுபாக₃த:) என்கிறபடியே அழகுக்குத் தோற்று இழிந்த என்னுடைய நெஞ்சாகையாலே விஷயாந்தரம் கண்டு போகுவதொன் றன்று என்கை. (மம சித்தம்) a"என் மனனே" என்னுமா போலே நெஞ்சினுடைய ப₄வ்யதையைக் கண்டு உகக் கிறன். (வைஷ்ணவத்வம் து) 'து'ஶப்₃த₃த்தாலே அவதா₄ர ணத்தைச் சொல்லுகிறது. வைஷ்ணவத்வமாவது,— ப₄க₃வத்பாரதந்த்ர்ய ஸுக₂மாதல், தத₃நுகூலவ்ருத்தியாதல். 109. "एतमानन्दमयमात्मानमुपसंक्रामति" (ஏதமாநந்த₃மயமாத்மாந- முபஸங்க்ராமதி), 110. "अनुसञ्चरन्" (அநுஸஞ்சரந்) என்றும், 111. "येन येन धाता गच्छति, तेन तेन सह गच्छति। छाया वा सत्त्वमनुगच्छेत्॥" (யேந யேந தா₄தா க₃ச்ச₂தி, தேந தேந ஸஹ க₃ச்ச₂தி। ச₂ாயா வா ஸத்த்வமநுக₃ச்சே₂த் ॥) என்றும் வேதா₃ந்தங்கள் பாரதந்த்ர்யத்தையே புருஷார்த்த₂ மாகச் சொல்லிற்றினவிறே. 112. "कुरुष्व मामनुचरं" (குருஷ்வ மாமநுசரம்) என்னக்கடவதிறே. 13.

---

a திருவாய் 1-1-1.

தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டிருக்கும் ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யாந ஸ்ரீகோஶத்தில், 13-வது ஶ்லோக வ்யாக்யாநத்தின் கடைசியில் காணப்படும் அதிகபாடம்

(காமயே) ஸங்கத்தளவன்று என்கை. **"தவ பரிஜந பாவம் காமயே"**[ஸ்தோ-ர 47] என்று அருளிச்செய்ததுக்கும் முதலிறே இது. கேவலபதத்தாலே இத்தலைக்கு ரஸித்திருக்கும்படியன்றிக்கே ஸ்ரக்சந்தநாதிகளைப்போலே அத்தலைக்கே போக்யமாயிருக்குமென்கை, a "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே" என்னக்கடவதிறே. பாரதந்த்ர்யமே ஸ்வரூபமாயிருக்குமவனுக்கு அனுகூலவ்ருத்தியில் வந்தால் ஸ்வபாவ நியதியில்லை; **111. "தத்யதா தருணவத்ஸா வத்ஸம் வத்ஸோ வா மாதரம்"** என்று ரக்ஷ்யரக்ஷகத்வநியதி கண்டிலோமிறே. **"ப்ராதா பர்த்தா ச பந்துஶ்ச பிதா ச மம ராகவ:"** என்று இளையபெருமாளும் ஒரு முறையிலே வ்யவஸ்திதராய் நின்றிலரிறே. தேரிலே ஏறினபோது சத்ரசாமரதாரிகளாய் நின்றாப்போலே, காட்டிலே போகிறபோதும் கநித்ர பிடகாதரரானாரிறே. தலைநீர்ப்பாட்டிலே பரிமாறுகிற பிராட்டியும் **"தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ"** என்று அபிமதனுக்கு அனுரூபமான ரூபமே தனக்கும் ரூபமாகப் பரிக்ரஹித்தாளிறே. **272. "யதா யதா ஹி கௌஸல்யா"** என்கிறபடியே கௌஸலையாரும் ஒரு முறையிலே நின்றிலளிறே சக்ரவர்த்தியைக் குறித்து. **(ஸர்வஜந்மஸு)** நித்யனான ஆத்மாவுக்கு ஜந்மமாவது,— ஶரீர ஸம்யோகமிறே. ஶேஷத்வரஸம் அவிச்சிந்நமாய்ச் செல்லுமாகில், ஜந்மபரம்பரைகளை அனுமதி பண்ணினாலும் விரோதமில்லையென்கை. **"ஸம்ஸாரேऽஸ்மிந் பயாவஹே மாம் பாஹி"** [8] என்கிற இதுவும் தாஸ்யரஸத்துக்கு விரோதி என்றிறே. இத்தால் ஜந்மஸம்பந்தமறுகை ஸ்வயம்புருஷார்த்தமன்றென்கை. அதவா, **(ஸர்வஜந்மஸு) 80. "அஜாயமாநோ பஹுதா விஜாயதே"** என்றும், **"பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி"** என்றும் ஜகத்ரக்ஷணார்த்தமாக அவதரிக்கும் அவதாரங்கள்தோறும் தொடர்ந்து அடிமை செய்யவேணும் என்றானென்றுமாம்.

---

a திருவாய் 2-9-4.

इत्येवमनया स्तुत्या स्तुत्वा देवं दिने दिने।
किङ्करोऽस्मीति चात्मानं देवायैवं निवेदयेत्॥ १४॥

14. இத்யேவமநயா ஸ்துத்யா ஸ்துத்வா தே₃வம் தி₃நே தி₃நே।
கிங்கரோऽஸ்மீதி சாத்மாநம் தே₃வாயைவம் நிவேத₃யேத்॥

---

14. பதவுரை:— இதி ஏவம் — இம்மாதிரியாக, **அநயா ஸ்துத்யா** — இந்த ஸ்தோத்ரத்தாலே, **தே₃வம்** — எம்பெருமானை, **தி₃நே தி₃நே**—தினந்தோறும், **ஸ்துத்வா**—துதித்து, **கிங்கர: அஸ்மி இதி ச**—(அடியேன்) உனக்கு அடிமையாக ஆகவேணும் என்று, **தே₃வாய**—ஸர்வேஶ்வரன் பொருட்டு, **ஏவம்**—இம்மாதிரியாக, **நிவேத₃யேத்**—(ஆத்மாவை) ஸமர்ப்பிக்கக்கடவன்.

அவ:—(இத்யேவமித்யாதி₃) இதில் ஓடின ப்₄ராவவ்ருத்தியின்றிக்கே ஒழிந்தவன் இப்பாசுரத்தை நாடோறும் படித்து, 'அடியேனாகவேணும்' என்று ஆத்மஸமர்ப்பணத்தைப் பண்ணுவான்.

வ்யா:—(இத்யேவம்) 'இதி' என்றும், 'ஏவம்' என்றும் அர்த்த₂த்தினுடையவும் ஶப்₃த₃த்தினுடையவும் ஸ்வரூபம் சொல்லுகிறது. இத்தால் அல்லாத ஜிதந்தைகளிற்காட்டில் இதுக்கு உண்டான ஏற்றம் சொல்லுகிறது. **(அநயா ஸ்துத்யா)** 1. **"जितन्त इति मन्त्रेण"** (ஜிதந்த இதி மந்த்ரேண) என்று ப்ரதே₃ஶாந்தரத்திலே மந்த்ரமாகச் சொல்லிற்று; இங்கு ஸ்தோத்ரமாகச் சொல்லிற்று; இதுக்கு அடி என்? என்னில்: "மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:" என்கிறபடியே அநுஸந்தா₄தாவை உத்₃த₄ரிப்பிக்குமென்றிட்டு மந்த்ரமென்கிறது. ஸ்தவ்யனாய், ஸ்தவப்ரியனான ஈஶ்வரன் திருச்செவி சாற்றினால் முகமலருமதாகையாலே ஸ்தோத்ரமென்கிறது. **(தே₃வம்)** 113. **"साक्षाद्देवः पुराणोऽसौ"** (ஸாக்ஷாத் தே₃வ: புராணோऽஸௌ) என்று நிருபாதி₄க தே₃வனாகச் சொல்லக்கடவதிறே. **(தி₃நே தி₃நே)** அர்த்த₂

ஜ்ஞானம் உடையவனுக்கு இந்த ஶப்₃தோ₃ச்சாரணம் காத₃சித்கமாகவுமாம்; இந்தப் பாசுரத்தைப் பற்றுமவனுக்கு நாள்தோறும் உச்சரிக்கவேணும். (கிங்கரோऽஸ்மீத்யாதி₃) நான் கிங்கரனாகவேணுமென்று ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணுவான். 'இவ்வித அநுஷ்டா₂னத்துக்கு ப்ரயோஜனமென்?' என்னில்: விலக்ஷணராயிருப்பார் சொன்ன பாசுரத்தை தே₃ஹாத்மாபி₄மானிகள் சொன்னாலும், அவர்களை நினைத்து, அவர்களைப்போலே ஈஶ்வரன் விஷயீகரிக்கும் என்று கருத்து. 'எது போல?' என்னில்: ஓரீற்று நல்ல கன்றிட்டுக் கறந்த பசு, பின்பு அசல் கன்றிட்டாலும் மறைத்துத் தோற்கன்றை மடுவிக்க, பின்புத்தைக் கன்றையே நினைத்துப் பால் சுரக்குமாபோலே.

பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த
ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்₂யானம் முற்றிற்று.

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே ஶரணம்.



ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்₂யானத்திலுள்ள சில கடி₂ன பத₃ங்களுக்கு அர்த்த₂ங்கள்

பக்கம்

(176) *ப்ரதிபாத₃நம்*—அறிவித்தல். *பௌருஷேயம்*—புருஷனால் செய்யப்பட்டது. *து₃ஷ்ப்ராபமான*—அடைய அரிதான.

(177) *ப்ரதிபாத்₃யன்* — அறிவிக்கப்படுபவன். *லபி₄த்து* — அடைந்து.

(178) *பரிச்சே₂தி₃க்க*—அளவிட. *அநந்யஸாத்₄யன்*—மற்றொருவனால் அடையமுடியாதவன். *அநந்யார்ஹஶேஷபூ₄தன்*—வேறொருவனுக்கு உரித்தானவனல்லாத அடிமை.

(179) *க்₃ரஸ்தர்*—பீடிக்கப்பட்டவர்கள். *ப்ரவணர்*—ஈடுபட்டவர்கள். *ஶரண்யதை*—ஶரணமடையத்தகுந்தவனாயிருக்கும் தன்மை.

(180) *விஷயாந்தரம்*—வேறு விஷயங்கள்.

(181) *அடி*—காரணம். *பர்யாயம்*—ஒரே பொருளையுடைய சொல்.

(182) *முமுக்ஷுஸிஸ்ருக்ஷயா*—மோக்ஷத்தில் இச்சை₂யுடையவனை ஸ்ருஷ்டிப்பதில் விருப்பத்தால்.

(183) *கர்மோபாதி₄கம்*-கர்மத்தைக் காரணமாகக் கொண்டது. *நிருபாதி₄க*—ஒரு காரணத்தால் ஏற்படாத; இயற்கையான. *மறித்து*—மறுபடியும். *பரித்ராணம்*—ரக்ஷணம். *ப்ரோத்ஸாஹனம்*—தூண்டுதல்.

(184) *அவிச்சி₂ந்நம்*—இடைவிடாதது.

(185) *அஸங்க்₂யாதம்*—கணக்கற்றது. *ஸுஶகம்*—ஸுலப₄மாகச் செய்யத்தக்கது. *வ்யவஸிதர்*—தீர்மானத்தையுடையவர்.

(186) *வ்ருத்தம்*—நடத்தை. *பரது₃:க்க₂ாஸஹிஷ்ணுத்வம்*—பிறருடைய து₃க்க₂த்தை ஸஹியாமை.

(187) *அதி₄க்ருதர்* — அதி₄காரமுள்ளவர்கள். *கௌ₃ணம்*—அமுக்₂யம்.

(189) *ஸ்ரஷ்ட்ரந்தரவ்யாவ்ருத்தி* — மற்ற ஸ்ரஷ்டாக்களின் இன்மை.

(190) *நைரபேக்ஷ்யம்*—அபேக்ஷியாமலிருக்கும் தன்மை.

(192) *கர்மீப₄வித்தவர்*—விஷயமானவர்.

(193) *அவதா₄ரணம்*—ஏவகாரம்.

(194) *உக்தம்*—சொல்லப்பட்டது.

(196) ***ஸ்வரூபாந்யதா2பா4வம்*** — ஸ்வரூபத்தில் மாறுபாடு. ***தத்3க3ததோ3ஷம்***—அவரிடமிருக்கும் தோ3ஷம்.

(197) ***அதீந்த்3ரியம்***-இந்திரியங்களுக்கு எட்டாதது. ***கோ3சரம்***-விஷயம்.

(198) ***தாத3ர்த்2யம்***—அவர்க்காயிருக்கும் இருப்பு. ***அப்ராப்தம்***-தகாதது.

(200) ***யுக3பத்***—ஒரே சமயத்தில். ***அக்ருத்யகரணம்***—செய்யத் தகாததைச் செய்தல்.

(201) ***அக4டிதம்*** — செய்யமுடியாதது. ***ப்ராபிக்க*** — அடைய. ***க்ருதக்ருத்யன்***—செய்யவேண்டியவற்றைச் செய்தவன்.

(203) ***அண்டா3ந்தர்வர்த்தி***—அண்ட3த்திற்கு உள்ளிருப்பவன்.

(204) ***ப்ரதா4நாத் அதி4கம்***—ப்ரக்ருதியைவிட மேலானது.

(206) ***ஶரீரானுப3ந்தி4***—ஶரீரத்தைச் சேர்ந்தது. ***ஶேஷத்வம்***—அடிமையாயிருக்கும் தன்மை.

(207) ***ந்யஸ்தப4ரன்***—ப4ாரத்தை வைத்தவன்.

(208) ***உடலான***—ஸாத4னமான. ***அந்யபரதை***—மற்றவைகளில் ஈடுபட்டிருக்கும் தன்மை. ***கரணங்கள்***—இந்த்3ரியங்கள்.

(209) ***து3ரிதங்கள்***—பாபங்கள்.

(210) ***ஸமுச்சயிக்கிறது***-கூட்டுகிறது. ***தலைக்கட்டுதல்***-முடித்தல். ***அனுஷ்டே2யம்***—அனுஷ்டிக்கவேண்டியது.

(212) ***வைமுக்2யம்***—விமுக2னாயிருக்கும் தன்மை. ***த்யாஜ்யம்***—கைவிடத்தக்கது. ***உபாதே3யம்*** — எடுத்துக்கொள்ளத் தக்கது.

(214) ***விலக்ஷணமான***—மேலான.

(215) ***ஸந்நிஹிதம்***—அருகிலிருப்பது. ***அத்4யவஸாயம்***-உறுதி.

(217) ***ஸ்வவஶர்***—ஸ்வதந்த்ரர். ***ஸ்வாபம்***—தூக்கம்.

(218) ***நசை***-ஆசை. ***ப்ரஸாதா3யத்தம்***-அருளாலே ஏற்பட்டது. ***ருக்3ணஶரீரன்***—வியாதியுள்ள சரீரத்துடன் கூடியவன்.

(219) ***ஸாரஸ்யம்***—இனிமை. ***அவதி4***—எல்லை. ***இறே***—அல்லவா. ***ஒபாதி***—போல.

(220) ***வ்யாஹதபா4ஷணம்***—மாறான பேச்சு.

(221) ***ஶேஷித்வம்***—ஸ்வாமியாயிருக்கும் தன்மை. ***ப4வ்யதை***—அடங்கியிருக்கும் தன்மை.

(223) ***ஸ்தவ்யன்***—ஸ்தோத்ரம் செய்யத்தக்கவன்.

(224) ***காதா3சித்கம்***—சிலசமயங்களிலுள்ளது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் க்ருஷ்ணஸூரயே நம:



ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு

—[O]—

1. ஜிதந்த இதி மந்த்ரேண

['ஜிதந்தே' என்னும் மந்திரத்தினுல்.]

2. அவித்₃யாதோ தே₃வே பரிப்₃ருட₄தயா வா விதி₃தயா
ஸ்வப₄க்தேர் பூ₄ம்நா வா ஜக₃தி க₃திமந்யாமவிது₃ஷாம் ।
க₃திர் க₃ம்யஶ்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ:
ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ க₂லு ப₄க₃வாந் ஶௌநகமுநி: ॥

[ப₄க₃வத்₃விஷயத்தில் அறியாமையினுலாவது, நன்ருக அறிந்திருப்பதினுலேயாவது, தன் ப₄க்தியின் ஆதி₄க்யத்தினுலேயாவது இவ்வுலகில் வேறு உபாயத்தை அறியாதவர்களுக்கு, 'உபாயமும் உபேயமும் இந்த ஹரியே' என்று 'ஜிதந்தே' என்று பெயரையுடைய மந்த்ரத்தின் ரஹஸ்யத்தை ப₄க₃வான் ஶௌநகமுனி வெளிப்படுத்திஞரன்ரே.]

3. ஸ்தோ-ப்ர (298)

4. ,, (323)

5. ,, (224)

6. யோऽந்யதா₂ ஸந்தமாத்மாநமந்யதா₂ ப்ரதிபத்₃யதே ।
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ॥

[ப₄க₃வானுடைய உடைமையாயிருக்கும் ஆத்மாவை, எவனெருவன் தனக்குச் சொந்தமாக நினைக்கிருனே, ஆத்மாவை அபஹரிப்பவனுன அந்தத் திருடனுல் செய்யப்படாத பாபம் எது?]

---

2. ப₄ட்டர் முக்தகம். 6. பா₄ரதம் உத்₃யோக₃பர்வம். 42-35.

7. யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி₃ ஸ்தி₂த:।
தேந சேத₃விவாத₃ஸ்தே மா க₃ங்க₃ாம் மா குரூந் க₃ம:॥

[எல்லாரையும் நியமிப்பவனும், ஸூர்யமண்ட₃லத்தின் நடுவிலிருப்பவனும், எல்லாருக்கும் இனியவனுயிருப்பவனும் எவனே, அவன் உன்னுடைய ஹ்ருத₃யத்திலிருக்கிருன். அவனுடன் உனக்கு விவாத₃மின்றியிலே இருந்ததாகில், க₃ங்கை₃க்கும், குருக்ஷேத்ரத்திற்கும் நீ போகவேண்டியதில்லே.]

8. க்ஷேத்ரஜ்ஞஸ்யேஶ்வரஜ்ஞாநாத் விஶுத்₃தி₄: பரமா மதா

[ஜீவனுக்கு ஈஶ்வரனை அறிவதாலேயே மேலான ஶுத்₃தி₄ உண்டாவதாக எண்ணப்படுகிறது]

9. பரமேஶ்வரஸம்ஜ்ஞோऽஜ்ஞ! கிமந்யோ மய்யவஸ்தி₂தே।
தத₂ாऽபி மர்த்துகாமஸ்த்வம் ப்ரப்₃ரவீஷி புந: புந:॥

[மூட₄! பரமேஶ்வரன் என்கிற பெயரையுடையவன், நான் இருக்கும்போது வேறு எவன் உளன்? அப்படியிருந்தபோதிலும், சாவதற்கு விருப்பமுள்ளவனை நீ மறுபடியும் மறுபடியும் (அப்படியே) சொல்லுகிருய்.]

10. த்₃விதா₄ப₄ஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்।
ஏஷ மே ஸஹஜோ தோ₃ஷ: ஸ்வப₄ாவோ து₃ரதிக்ரம:॥

[இரண்டாகப் பிளக்கப்பட்டாலும், இம்மாதிரி ஒருவனுக்கும் வணங்கமாட்டேன். இது என்னுடன் பிறந்ததான தோ₃ஷம். (அவரவர்களுடைய) ஸ்வப₄ாவம் மீறமுடியாததன்ருே.]

11. ஸ்தோ-ப்ர (61)

12. விலாஸலலிதம் ப்ராஹ ப்ரேமக₃ர்ப்ப₄ப₄ராலஸம்।
வஸ்த்ரே ப்ரக்₃ருஹ்ய கோ₃விந்த₃! மம கே₃ஹம் வ்ரஜேதி வை॥

---

7. மநுஸ்ம்ருதி 8-92. 8. யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி 3-1.
9. வி-பு 1-17-23. ஹிரண்யவாக்யம். 10. ஸா-யு 36-11. ராவண வாக்யம். 12. வி-பு 5-20-11.

[அந்தக் கூனியானவள், கண்ணனுடைய வஸ்த்ரங்களைப் பிடித்துக்கொண்டு, "கோவிந்தா! என்னுடைய வீட்டிற்குப் போகவேணும்" என்று விளையாட்டாயிருப்பதும், அழகானதும், நிறைந்த அன்பை அடக்கிக்கொண்டிருப்பதால் மெதுவாயிருப்பதுமான வார்த்தையைச் சொன்னாள்.]

13. புந: புந: ப்ரணம்யாஹ மாலாகாரோऽதிவிஸ்மித: ।

[மிகவும் ஆச்சரியத்தை அடைந்தவரான மாலாகாரர் மறுபடியும், மறுபடியும் வணங்கிச் சொன்னார்.]

14. ஹ்ருஷீகாணீந்த்₃ரியாண்யாஹுஸ் தேஷாமீஶோ
ஹ்ருஷீகேஶ இதி க்₂யாத:...... [யதோ ப₄வாந் ।

[இந்திரியங்களை 'ஹ்ருஷீகங்கள்' என்று சொல்லுகிறார்கள். நீர் அவைகளுக்கு ஈஶனாயிருப்பதால் ஹ்ருஷீகேஶன் என்று பிரஸித்₃தி₄பெற்றிருக்கிறீர்.]

15. யஶ் சக்ஷுஷி திஷ்ட₂ந்—வாசி திஷ்ட₂ந்

[எவனொருவன் கண்ணிலிருக்கிறானோ, எவன் வாக்கிலிருக்கிறானோ...]

16. ஸ்தோ-ப்ர (183)

17. ,, (115)

18. ,, (118)

19. அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூ₄தாநாமீஶ்வரோऽபி ஸந் ।
ப்ரக்ருதிம் ஸ்வாமதி₄ஷ்ட₂ாய ஸம்ப₄வாம்யாத்மமாயயா ॥

[பிறப்பற்றவனாகவும், அழிவற்றவனாகவும், பூ₄தங்களுக்கு ஈஶ்வரனாகவுமிருந்தபோதிலும், என்னுடைய ஸ்வப₄ாவத்தைக்கொண்டு, என் ஸங்கல்பத்தாலே நான் பிறக்கிறேன்.]

20. ஸ்தோ-ப்ர (187)

---

13. வி-பு 5-19-23. 15. ப்₃ருஹ 5.7.22. 19. கீ₃தை 4-6.

21. பரித்ராணாய ஸாதூ₄நாம் விநாஶாய ச து₃ஷ்க்ருதாம் ।
தர்₄மஸம்ஸ்தா₂பநார்த்தா₂ய ஸம்ப₄வாமி யுகே₃ யுகே₃ ॥

[ஸாது₄க்களை ரக்ஷிப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், வைதி₃கதர்₄மத்தை நிலைநிறுத்துவதற்கும் யுக₃ந்தோறும் நான் பிறக்கிறேன்.]

22. ஸ்தோ-ப்ர (119)

23. ,, (249)

24. மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித் யததி ஸித்₃த₄யே ।
யததாமபி ஸித்₃தா₄நாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத: ॥

[மனுஷ்யர்களில் ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவனே ஸித்₃தி₄யடையும் வரையில் முயற்சி செய்கிறான். ஸித்₃தி₄யடையும் வரையில் முயற்சி செய்பவர்களிலும் (பல்லாயிரத்தில்) ஒருவன்தான் என்னை உண்மையாக அறிகிறான்.]

25. ஸ்தோ-ப்ர (228)

26. கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரப₃ந்த₄நாத் ।

[ஜந்துவானவன் எதை ஜபிப்பதினால் ஜன்மஸம்ஸாரங்களாகிற கட்டுகளிலிருந்து விடுபடுகிறான் ?]

27. பவித்ரம் பரமம் புண்யம் தே₃ஶோऽயம் ஸர்வகாமது₄க் ।
யஸ்மிந் வாஸரமாத்ரேண வாஸம் வித₃த₄தாம் ந்ருணாம் ॥
ப₄யாந்வயா விநஶ்யேயுர் லோப₄மோஹாத₃யோ த்₃விஜ ॥

[ப்₃ராஹ்மணரே! யாதொரு தே₃ஶத்தில் ஒரு நாள் மாத்திரம் வாஸம் செய்யும் மனிதர்களுக்கு, ப₄யகாரணங்களும், லோப₄ம், மோஹம் முதலியவைகளும் நசிக்கின்றனவோ, அப்படிப்பட்ட இந்த தே₃ஶம் மிகவும் புனிதமாகவும், மனிதர்களுக்கு மோக்ஷோபாயமாகவும், எல்லா இஷ்டங்களையும் கொடுப்பதாகவுமிருக்கிறது.]

---

21. கீ₃தை 4-8. 24. கீ₃தை 7-3. 26. ஸஹஸ்ரநாமாத்₄யாயம்.
27. கா₃ருட₃புராணம்-11.

28. விஷ்ணுப₄க்திபரோ தே₃வோ விபரீதஸ் ததா₂ஸுர:।

[விஷ்ணுப₄க்தியில் ஈடுபட்டவன் தே₃வன்; அப்படியே ப₄க்தியற்றவன் அஸுரன்.]

29. த்₃வௌ பூ₄தஸர்கௌ₃ லோகேऽஸ்மிந் தை₃வ ஆஸுர ஏவ ச।

[இவ்வுலகில் பூ₄தங்களின் உற்பத்தி — தை₃வமென்றும், ஆஸுரமென்றும் இருவித₄ம்.]

30. ஸர்வலோகஶரண்யாய ராக₄வாய மஹாத்மநே।
நிவேத₃யத மாம் க்ஷிப்ரம் விபீ₄ஷணமுபஸ்தி₂தம்॥

[மஹாத்மாவும், எல்லா உலகுக்கும் ஶரண்மடையத்தகுந்தவனுமான ராக₄வனுக்கு இங்கு வந்திருப்பவனும், விபீ₄ஷணனென்ற பெயரையுடையவனுமான என்னை சீக்கிரமாக அறிவியுங்கள்.]

31. ஸ்தோ-ப்ர (202)

32. ,, (196)

33. ,, (312)

34. பாபாநாம் வா ஶுபா₄நாம் வா வதா₄ர்ஹாணும் ப்லவங்க₃ம।
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்₄யதி॥

[வானர! பாபிகளாயினும். புண்யமுள்ளவராயினும், கொல்லத்தகுந்தவர்களாயிருந்தாலும் கு₃ணவானுயிருப்பவனுல் (அவன் விஷயத்தில்) கருணை காட்டப்படவேண்டும். அபராத₄ம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.]

35. அநாலோசிதவிஶேஷாऽஶேஷலோகஶரண்ய

[(ஆஶ்ரயிப்பவர்களின்) தோ₃ஷகு₃ணங்களை நிரூபணம் செய்யாமலிருப்பவனே! எல்லா உலகுக்கும் ஶரண்யனே!]

---

28. விஷ்ணுத₄ர்மம் 109-74. 29. கீ₃தை 16-6.
30. ரா-யு 17-17. 34. ரா-யு 116-44. 35. ஶரணாக₃திக₃த்₃யம்-5.

36. ஸ்தோ-ப்ர (44)
37. ,, (83)
38. ஸ ஹி தம் ப்ரதிஜக்₃ராஹ ப₄ார்யாஹர்த்தாரமாக₃தம் ।
கபோதோ வாநரஶ்ரேஷ்ட₂ ! கிம் புநர் மத்₃விதே₄ா ஜந: ॥

[வானரத்தலைவனே! மனைவியைக் கொன்றவனும், தன்னை அடைந்தவனுமான அவ்வேடனை அந்தப் புரு வரவேற்ற தன்றோ. என்னைப்போன்ற மனிதனைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?]

39. ஸ்தோ-ப்ர (322)
40. ,, (239)
41. ஏவமுக்தாஸ் த்ரய: பார்த்த₂ா யமௌ ச ப₄ரதர்ஷப₄ா: ।
த்₃ரௌபத்₃யா ஸஹிதாஸ் ஸர்வே நமஶ்சக்ருர் ஜநார்த்த₃நம் ॥

[இம்மாதிரியாகச் சொல்லப்பட்டவர்களும், ப₄ரதகுலத்தில் உதித்தவர்களுள் சிறந்தவர்களுமான குந்தீபுத்ரர்கள் மூவரும், (மாத்₃ரியின்) இரட்டைப் பிள்ளைகளுமாகிய எல்லாரும், த்₃ரௌபதி₃யுடன் கூடியவர்களாய் ஜனர்த₃னனை நமஸ்கரித்தார்கள் (ஶரணமடைந்தார்கள்).]

42. ஸ்தோ-ப்ர (121)
43. ,, (38)
44. ஆகாஶாத் வாயு: । வாயோரக்₃நி: ।
அக்₃நேராப: । அத்₃ப்₄ய: ப்ருதி₂வீ ॥

[ஆகாஶத்திலிருந்து வாயு உண்டாயிற்று; வாயுவிலிருந்து அக்₃னி உண்டாயிற்று; அக்₃னியிலிருந்து ஜலம் உண்டாயிற்று; ஜலத்திலிருந்து பூ₄மி உண்டாயிற்று.]

45. ப்₃ரஹ்மா ஸ்ருஜத்யாதி₃காலே மரீசிப்ரமுக₂ாஸ் தத: ।
உத்பாத₃யந்த்யபத்யாநி ஜந்தவஶ்ச ப்ரதிக்ஷணம் ॥

---

38. ரா யு 18-25. 41. ப₄ார-ஆர192.56.
44. ஸுபா₃லோபனிஷத்-1. 45. வி-பு 1-22-35.

[பிரமன் ஆதிகாலத்தில் ஸ்ருஷ்டி செய்கிறான்; பிறகு மரீசி முதலியவர்களும், எல்லா ஜந்துக்களும் மக்களை க்ஷணந்தோறும் உண்டுபண்ணுகின்றனர்.]

46. ஸோऽபி₄த்₄யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர்
விவித₄ா: ப்ரஜா: ।
அப ஏவ ஸஸர்ஜாதௌ₃ தாஸு பீ₃ஜமவாஸ்ருஜத் ॥

[அந்தப் பரமாத்மா தம்முடைய ஶரீரத்தினின்றும் பல வித₄மான ப்ரஜைகளை ஸ்ருஷ்டி செய்ய விருப்பமுள்ளவராய் ஸங்கல்பித்து, முதலில் நீரையே ஸ்ருஷ்டித்தார்; அந்த ஜலத்தில் (தன் ஶக்தியாகிய) விதையை விதைத்தார்.]

47. ஸ ஏவ ஸ்ருஜ்யஸ் ஸ ச ஸர்க்க₃கர்த்தா
ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச ।
ப்₃ரஹ்மாத்₃யவஸ்த₂ாபி₄ரஶேஷமூர்த்திர்
விஷ்ணுர் வரிஷ்டோ₂ வரதோ₃ வரேண்ய: ॥

[ஸ்ருஷ்டி செய்யப்படுபவனும் அவனே; பிரமன் முதலிய அவஸ்தை₂களால் ஸ்ருஷ்டி செய்பவனும் அவனே; அவனே (உலகை) ரக்ஷிக்கிறான்; (உலகை) விழுங்குகிறான்; அவனே காப்பாற்றப்படுகிறான். எல்லாவற்றையும் ஶரீரமாகக் கொண்ட விஷ்ணுவே மேலானவன்; வரங்களைத் தருபவன்; வரிக்கத்தகுந்தவன்.]

48. தத₃பி₄த்₄யாநாதே₃வ து தல்லிங்கா₃த் ஸ: ।

[(மஹதா₃தி₃வஸ்துக்களுக்கும்) புருஷோத்தமனே (காரணம்); அவனுடைய ஸங்கல்பரூபமான அந்த அடையாளத்தாலே.]

49. ஸ்தோ-ப்ர (148)

50. ப₄க₃வத்ஸ்வரூபதிரோத₄ாநகரீம்

[ப₄க₃வத்ஸ்வரூபத்தை மறைப்பதான (ப்ரக்ருதியை).]

---

46 மனு 1-8. 47. வி-பு 1-2-70. 48. ப்₃ரஹ்மஸூத்ரம் 2-3-14. 50. ஶரணாக₃திக₃த்₃யம்-12.

51. ஸத்த்வாத₃யோ ந ஸந்தீஶே யத்ர ச ப்ராக்ருதா கு₃ணா:।
ஸ ஶுத்₃த₄ஸ் ஸர்வஶுத்₃தே₄ப்₄ய: புமாநாத்₃ய: ப்ரஸீத₃து॥

[எந்த ஈஶனிடத்தில் ப்ராக்ருதகு₃ணங்களான ஸத்வரஜஸ் தமோகு₃ணங்கள் இல்லையோ, ஶுத்₃த₄ர்களான எல்லோரையும்விட சுத்₃த₄னான அந்த ஆதி₃புருஷன் உகந்தருளுவானாக.]

52. ஸ்தோ-ப்ர (230)

53. ,, (47)

54. ஸம்ஸாரார்ணவமக்₃நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம்।
விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சித₃ஸ்தி பராயணம்॥

[ஸம்ஸாரமாகிற கடலில் முழுகினவர்களும், விஷயங்களினால் சூழப்பட்ட மனத்தை உடையவர்களுமான மனிதர்களுக்கு, விஷ்ணுவாகிற ஓடத்தைத் தவிர, (அக்கடலைக் கடக்க) மேலான ஸாத₄னம் வேறு ஒன்றுமில்லை.]

55. மயி ப்₄ருத்யே ஸ்தி₂தே தே₃வாநாஜ்ஞாபயத கிம் ந்ருபை:

[நான் உங்களுக்கு தா₃ஸனாயிருக்கையில், நீங்கள் தே₃வர்களுக்கே ஆஜ்ஞையிடலாமே! அரசர்களைக் கணிசிக்க வேண்டாவே.]

56. ஸ்தோ-ப்ர (177)

57. பரிஜநபரிப₃ர்ஹா பூ₄ஷணாந்யாயுதா₄நி
ப்ரவரகு₃ணக₃ணாஶ்ச ஜ்ஞாநஶக்த்யாத₃யஸ்தே।
பரமபத₃மத₃ாண்ட₃ாந்யாத்மதே₃ஹஸ் தத₂ாத்மா
வரத₃! ஸகலமேதத் ஸம்ஶ்ரிதார்த்த₂ம் சகர்த₂॥

[வரதனே! (விஷ்வக்ஸேனர், ஆதி₃ஶேஷன் முதலிய) பரிஜனங்களும், (ச₂த்ரம், சாமரம் முதலிய) பரிச்ச₂த₃ங்களும், ஆப₄ரணங்களும், ஆயுத₄ங்களும், ஜ்ஞானம், ஶக்தி முதலிய அந்தச் சிறந்த கு₃ணஸமூஹங்களும், ஸ்ரீவைகுண்ட₂மும், அண்ட₃ங்களும், உன்னுடைய தி₃வ்யமங்க₃ள

51. வி-பு 1-9-44. 54. விஷ்ணுத₄ர்மம் 1-59.
55. வி-பு 5-21-12. 57. வரத₃ராஜஸ்தவம்-63.

விக்₃ரஹமும், தி₃வ்யாத்மஸ்வரூபமுமாகிய இவையெல்லா வற்றையும் அடியவர்களுக்கு ஆக்கிவைத்தாய்.]

58. யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:

[எந்தப் பரமாத்மாவானவன், எல்லா வஸ்துக்களுடைய ஸ்வரூபத்தையும், ஸ்வபா₄வங்களையும் அறிகிருனே, எவனுடைய ஸங்கல்பமானது ஞானமயமாயிருக்கிறதோ...]

59. ஸ்தோ-ப்ர (205)

60. „ (180)

61. ந மே ஸ்நாநம் ப₃ஹுமதம் வஸ்த்ராண்யாப₄ரணாநி ச।
தம் விநா கைகயீபுத்ரம் ப₄ரதம் த₄ர்மசாரிணம்॥

[த₄ர்மவழிப்படி நடப்பவனும், கைகேயியின் புத்திரனுமான அந்த ப₄ரதனில்லாமல் எனக்கு ஸ்நானமும், வஸ்த்ரங்களும், ஆப₄ரணங்களும் இஷ்டமில்லை.]

62. ஸ்தோ-ப்ர (169)

63. புருஷ ஏவேத₃ம் ஸர்வம்। யத் பூ₄தம் யச்ச ப₄வ்யம்।
உதாம்ருதத்வஸ்யேஶாந:। யத₃ந்நேநாதிரோஹதி॥

[எந்த ஜக₃த்தானது முன் கல்பத்திலிருந்ததோ, எது பின் வரும் கல்பத்தில் உண்டாகப்போகிறதோ, எது இந்தக் கல்பத்திலிருக்கிறதோ, எந்த உலகம் அன்னத்திஞல் மறையாமலிருக்கிறதோ, இந்த எல்லா உலகும் புருஷஞகிற நாராயணனே. மோக்ஷத்திற்கும் இவனே ப்ரபு₄.]

64. ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ:। ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்।
ஸ பூ₄மிம் விஶ்வதோ வ்ருத்வா। அத்யதிஷ்ட₂த்
த₃ஶாங்கு₃லம்॥

[புருஷன் ஆயிரம் தலைகளையுடையவன்; ஆயிரம் கண்களை உடையவன்; ஆயிரம் கால்களை உடையவன்; அவன்

---

58. முண்ட₃கோபனிஷத் 1-1-10. 61. ரா-யு 124-6.
63. புருஷஸூக்தம் 1-2. 64. புருஷஸூக்தம் 1-1.

பூமியை முழுவதும் வியாபித்து, அனந்தயோஜனப்ரமாண மான ப்ரஹ்மாண்டத்தை ஆக்ரமித்தான்.]

65. ஸ்தோ-ப்ர (82)

66. த்வம் ஹி ஸத்யவ்ரதஶ் ஶூரோ தார்மிகோ த்ருடவிக்ரம:।
பரீக்ஷ்யகாரீ ஸ்ம்ருதிமாந் நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச॥

[நீர் பழுதாகாத வ்ரதத்தையுடையவர்; சூரர்; தர்மிஷ்டர்; திடமான பராக்ரமமுள்ளவர்; (எல்லாமறிந்தவராயிருந்தும்) ஆலோசித்துக் காரியங்களைச் செய்பவர்; (உம்மிடம் ஆஶாலேஶம் உடையவரையும்) எப்போதும் நினைவிற் கொண்டிருப்பவர்; நண்பர்களுக்குத் தம்மையே கொடுப்பவர்.]

67. பராऽஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே
ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச।

[இந்தப் பரமாத்மாவுக்குப் பலபடிப்பட்டதும், மேலானதுமான ஶக்தியும், இயற்கையான ஞானமும், பலமும், (ஸ்ருஷ்டித்தல் முதலிய) காரியங்களும் உண்டென்று அறியப் படுகிறது.]

68. யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:।
தம் ப்ரணம்ய ஹரிம் ஶாஸ்த்ரம் ந்யாயதத்த்வம்
ப்ரசக்ஷ்மஹே॥

[எவனொருவன், எப்போதும் எல்லா வஸ்துக்களையும் ஒரே சமயத்தில் தானாகவே அறிகிறானோ, அந்த ஹரியை வணங்கி, ந்யாயதத்வம் என்னும் ஶாஸ்திரத்தை இயற்று கிறோம்.]

69. ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா
பஶ்யதி கஶ்சநைநம்।

[இவனுடைய ரூபம் கண்ணால் காணும்படி இராது; ஒருவனும் இவனைக் கண்ணால் பார்க்கிறதில்லை.]

---

66 ரா-யு 17-34. 67. ஶ்வே-6. 68. நாதமுனிகள் அருளிய ந்யாயதத்வம். 69. தைத்-நாரா 1-10.

70. ஸ்தோத்ரரத்னம்-30.

71. ஸஞ்ஜீவயந்நபி ம்ருதம் ஸுதமுத்தராயாஸ்
ஸாந்தீ₃பிநேஶ் சிரம்ருதம் ஸுதமாநயம்ஶ்ச।
தா₄ம்நோ நிஜாத் த்₃விஜஸுதாந் புநராநயந் வா
ஸ்வாமேவ தாம் தநுமஹோ கத₂மாநயஸ்த்வம்॥

[இறந்துபோன உத்தரையின் புத்திரனைப் பிழைப்பித்தும், நெடுங்காலத்திற்கு முன் உயிர் துறந்த ஸாந்தீ₃பினி குமாரனை மீட்டுக்கொண்டுவந்தும், தன்னுடைய பரமபத₃த் திலிருந்து வைதி₃கன் பிள்ளைகளை மறுபடி அழைத்து வந்தும் போந்த நீ அவரவர்களுடைய அந்த ஶரீரத்தையே எப்படிக் கொண்டுவந்தாய்? ஆச்சரியம்.]

72. அஹம் ஸ்மராமி மத்₃ப₄க்தம் நயாமி பரமாம் க₃திம்॥

[என்னுடைய ப₄க்தனை (அவன் சாகும் சமயத்தில்) நான் நினைக்கிறேன். மேலான க₃திக்கு (அவனை நான்) அழைத்துச் செல்லுகிறேன்.]

73. அஹமந்நமஹமந்நமஹமந்நம்।
அஹமந்நாதோ₃ऽஹமந்நாதோ₃ऽஹமந்நாத₃:।

[நான் (பரமாத்மாவுக்கு) அன்னம்போல் போ₄க்₃யமா யிருப்பவன்; நான் (பரமாத்மாவுக்கு) அன்னம்; நான் (பரமாத்மாவுக்கு) அன்னம். நான் (பரமாத்மாவின் உகப் பாகிற) அன்னத்தைப் பு₄ஜிப்பவன்; நான் அன்னத்தை பு₄ஜிப்பவன்; நான் அன்னத்தை பு₄ஜிப்பவன்.]

74. பராவரேஶம் ஶரணம் வ்ரஜத்₄வமஸுரார்த₃நம்।......
ப்ரதா₄நபும்ஸோரஜயோ: காரணம் கார்யபூ₄தயோ:॥

[மேலானவர்களுக்கும், தாழ்ந்தவர்களுக்கும் ஈஶனும், அஸு ரர்களை ஹிம்ஸிப்பவனும், கார்யபூ₄தங்களும், பிறப்பற்றவையு

---

71. அதிமானுஷஸ்தவம்-58. 72. வராஹசரமஶ்லோகம்.
73. தை-ப்₄ருகு₃ 10-6. 74. வி-பு 1-9-35, 37.

மான ப்ரக்ருதிக்கும், புருஷனுக்கும் காரணமானவனுமான விஷ்ணுவை ஶரணமடையுங்கள்.]

75. யத: ப்ரஸூதா ஜக₃த: ப்ரஸூதீ தோயேந
ஜீவாந் வ்யஸஸர்ஜ பூ₄ம்யாம் ।

[உலகத்தை உண்டுபண்ணும் ப்ரக்ருதியானது எவனிடமிருந்து உண்டாயிற்றோ, எவன் ஜலம் முதலிய பூ₄தங்களுடன் பூ₄மியில் ஜீவர்களை ஸ்ருஷ்டித்தானோ...]

76. யஸ்மிந்நித₃ம் ஸஞ்ச விசைதி விஶ்வம்
யஸ்மிந் தே₃வா அதி₄ விஶ்வே நிஷேது₃: ।
ததே₃வ பூ₄தம் தது₃ ப₄வ்யமா இத₃ம்
தத₃க்ஷரே பரமே வ்யோமந் ॥

[எதனிடத்தில் இவ்வுலகம் (ஸம்ஹாரகாலத்தில்) உள்ளடங்குகிறதோ, (ஸ்ருஷ்டிகாலத்தில்) வெளிப்படுகிறதோ, எல்லா தே₃வர்களும் ஆஶ்ரயித்திருக்கிறார்களோ, அந்த ப்₃ரஹ்மமே முன்னிருந்த வஸ்துக்களுக்கும் அந்தர்யாமி; பின் வரப்போகும் வஸ்துக்களுக்கும் அந்தர்யாமி. **அதுவே அழியாததான பரமபத₃த்தில்** (எழுந்தருளியிருக்கிறது).]

77. ஸேயம் தே₃வதைக்ஷத । ஹந்தாऽஹமிமாஸ் திஸ்ரோ தே₃வதா அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணீதி ॥

[அப்படிப்பட்ட இந்த தே₃வதை "நான் (நெருப்பு, நீர், பூ₄மி என்னும்) இந்த மூன்று தே₃வதைகளையும் இந்த ஜீவஸமஷ்டியுடன் கூடிய என்னுடைய ஸ்வரூபத்தால் வியாபித்து நாமரூபங்களைச் செய்யக்கடவேன்." என்று ஸங்கல்பித்தது.]

78. தத் ஸ்ருஷ்ட்வா। ததே₃வாநுப்ராவிஶத் । தத₃நுப்ரவிஶ்ய। ஸச்ச த்யச்சாऽப₄வத் ।...ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமப₄வத் ।

---

75. தை-நா 1-4. 76. தை-நா 1-2.
77. சா₂ந்-உப 6-3-2. 78. தை-ஆந-6.

[அதை ஸ்ருஷ்டித்தவுடன் (அந்த ப்₃ரஹ்மம்) அதை வியாபித்தது; அதை வியாபித்தவுடன் விகாரமற்றதான சேதனமாகவும், விகாரமுள்ளதான அசேதனமாகவுமாயிற்று. (விகாரமின்மையினால்) ஸத்யம் எனப்படும் சேதனமாகவும், (விகாரமடைதலால்) அஸத்யமெனப்படும் அசேதனமாகவும் (ஆகிய ப்₃ரஹ்மம்) விகாரமற்றதாகவே இருந்தது.]

79. சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத் தத்₃வ்யபதே₃ஶோ-
பா₄க்தஸ் தத்₃பா₄வபா₄வித்வாத்।

[சராசரங்களைச் சொல்லும் அந்தந்த ஶப்₃த₃ங்கள் (ப்₃ரஹ்ம விஷயத்தில்) முக்கியங்களே. ப்₃ரஹ்மத்தின் அனுப்ரவேசித்திருக்கும் தன்மையினாலே ஏற்படுவதாகையால்.]

80. ஸ்தோ-ப்ர (223).

81. பூ₄மௌ நிபாத்யமாநோऽத்₃ரேரந்தராஸ்தே ஸ்வபந்நிவ।

[மலையிலிருந்து பூ₄மியில் தள்ளப்பட்டு நடுவில் தூங்குபவன் போலிருக்கிறான்.]

82. ஹா ராம! ஹா லக்ஷ்மண! ஹா ஸுமித்ரே!
ஹா ராமமாத:! ஸஹ மே ஜநந்யா।
ஏஷா விபத்₃யாம்யஹமல்பபா₄க்₃யா
மஹார்ணவே நௌரிவ மூட₄வாதா॥

[ஹா ராம! ஹா லக்ஷ்மண! ஹா ஸுமித்ரே! என் தாயுடன் கூடிய ராமமாதாவே! அல்பபா₄க்₃யமுள்ள நான் பெருங்கடலில் காற்றினால் அடிக்கப்பட்ட கப்பல் போல் கஷ்டப்படுகிறேன்.]

83. ஏஹி பஶ்ய ஶரீராணி முநீநாம் பா₄விதாத்மநாம்।
ஹதாநாம் ராக்ஷஸைர் கோ₄ரைர் ப₃ஹூநாம்
ப₃ஹுதா₄ வநே॥

---

79. ப்₃ர-ஸூ 2-3-17. 82. ரா-ஸு 28-8. 83. ரா-ஆ 6-16.

[ராம! (இங்கு) வருவாயாக; பரமாத்மாவை தியானம் செய்பவர்களும், வனத்தில் கோ₄ரமான ராக்ஷஸர்களால் பலவித₄மாக ஹிம்ஸிக்கப்பட்டவர்களுமான பல முனிவர்களுடைய ஶரீரங்களைப் பார்ப்பாயாக]

84. ஸ்தோ-ப்ர (219)

85. ,, (322)

86. ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி₃ ஸந்நிவிஷ்டோ
மத்தஸ் ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச ।
வேதை₃ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்₃யோ
வேதா₃ந்தக்ருத் வேத₃விதே₃வ சாஹம் ॥

[எல்லாருடைய ஹ்ருத₃யத்திலும் நான் அமர்ந்திருக்கிறேன். என்னிடமிருந்தே நினைவும், ஜ்ஞானமும், மறதியும் உண்டாகின்றன. எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே. வேத₃த்தில் சொல்லப்பட்ட ப₂லன்களைக் கொடுப்பவனும், வேத₃த்தை அறிபவனும் நானே.]

87. க்ருதக்₄நோऽபி விஶுத்₃த்₄யதி
[செய்ந்நன்றி மறந்தவன்கூட **ஶுத்₃தி₄யடை**கிறான்.]

88. ஸ்தோ-ப்ர (326)

89. அஶ்வத்த₂ம் ஸிந்து₄ராஜஞ்ச
ஸதா₃ ஸேவேத ந ஸ்ப்ருஶேத் ।
மந்த₃வாரே ஸ்ப்ருஶேத் பூர்வம்
அபரம் பர்வணி ஸ்ப்ருஶேத் ॥

[அரசமரத்தையும், கடலையும் எப்போதும் பார்க்கலாம். (ஆனால்) எப்போதும் தொடலாகாது. முன் சொல்லப்பட்ட அரசமரத்தை சனிக்கிழமையில் தொடலாம்; பின் சொல்லப்பட்ட கடலை பர்வகாலங்களில் தொடலாம்.]

90. மது₄ரா நாம நக₃ரீ புண்யா பாபஹரீ ஶுப₄ா ।
யஸ்யாம் ஜாதோ ஜக₃ந்நாத₂ஸ் ஸாக்ஷாத்₃
விஷ்ணுஸ் ஸநாதந: ॥

---

86. **கீ₃தை 15-15.**

[யாதொரு நகரத்தில், உலகங்களுக்கெல்லாம் நாயகனும், அநாதியானவனுமான ஸாக்ஷாத் விஷ்ணு (க்ருஷ்ணனாய்) திருவவதரித்திருக்கிறாரோ, அப்படிப்பட்ட மதுரை என்னும் நகரம் அவனைத் தருகைக்கு உபாயமாகவும், பாபத்தைப் போக்கடிப்பதாகவும், ஸ்வயம் ப்ராப்யமாகவு மிருக்கிறது.]

91. ஶரீரமாத்₃யம் க₂லு த₄ர்மஸாத₄நம்

[ஶரீரமன்றோ முதன்மையான த₄ர்மஸாத₄னம்.]

92. விசித்ரா தே₃ஹஸம்பத்திரீஶ்வராய நிவேதி₃தும் ।
பூர்வமேவ க்ருதா ப்₃ரஹ்மந் ஹஸ்தபாதா₃தி₃ஸம்யுதா ॥

[ப்₃ராஹ்மணரே! கைகால் முதலியவைகளுடன் கூடியதும், விசித்திரமானதுமான தே₃ஹமாகிற இச்செல்வம், ஸர்வேஶ்வரனுக்கு ஸமர்ப்பிப்பதற்காக ஆதி₃காலத்திலேயே செய்யப்பட்டிருக்கிறது.]

93. ஶ்ரேயாந் ஸ்வத₄ர்மோ விகு₃ண: பரத₄ர்மாத்
ஸ்வநுஷ்டி₂தாத் ।
ஸ்வத₄ர்மே நித₄நம் ஶ்ரேய: பரத₄ர்மோ ப₄யாவஹ: ॥

[நிஹீனமாயினும், ஸ்வத₄ர்மம், கு₃ணத்துடன் கூடினதும் (சிறிதுகாலம்) அனுஷ்டி₂க்கப்படுவதுமான பரத₄ர்மத்தைக் காட்டிலும் மேலானது. தன்னுடைய த₄ர்மத்தை அனுஷ்டி₂த்து இறப்பதும் மேலானது; மற்றொருவனுடைய த₄ர்மம் ப₄யத்தைத் தருவது.]

94. ஸ்தோ-ப்ர (48)

95. ,, (49)

96. ஶங்க₂சக்ரக₃தா₃பாணே! த்₃வாரகாநிலயாச்யுத! ।
கோ₃விந்த₃! புண்ட₃ரீகாக்ஷ! ரக்ஷ மாம் ஶரணாக₃தாம் ॥

---

91. குமாரஸம்ப₄வம் 5-33. 92. ஸ்ரீவிஷ்ணுதத்வம்.
93. கீ₃தை 3-35. 96. ப₄ாரதம்-ஸப₄ா-66.

[(ஆம்ரிதரை ரக்ஷிக்க) ஶங்க₂ம், சக்ரம், க₃தைத்₃ முதலிய ஆயுத₄ங்களைக் கையிலே த₄ரித்திருப்பவனே! த்₃வாரகையில் வஸிப்பவனே! அடியவரை (ஒருபொழுதும்) நழுவவிடாத வனே! கோ₃விந்த₃ா! செந்தாமரைக்கண்ணு! ஶரண மடைந்த என்னை ரக்ஷிப்பாயாக.]

97. ஸ்தோ-ப்ர (110)

98. ,, (228)

99. தஸ்மாத்₃ வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத்
அந்யோऽந்தர ஆத்மாऽऽநந்த₃மய: ।

[அப்படிப்பட்ட இந்த விஜ்ஞானமயனை ஜீவனைக் காட்டிலும், வேறுபட்டவனும், (அவனுக்கு) அந்தராத்மாவாயிருப்பவனும் ஆநந்த₃மயனை பரமாத்மா.]

100. ஸ்தோ-ப்ர (116)

101. ஸர்வக₃ந்த₄ஸ் ஸர்வரஸ:

[எல்லா க₃ந்த₄ங்களையுமுடையவன்; எல்லா ரஸங்களையுமுடையவன் (பரமாத்மா).]

102. ஸ்தோ-ப்ர (41)

103. வ்யவஸாயாத்₃ருதே ப்₃ரஹ்மந் நாஸாத₃யதி தத்பரம் ।

[ப்₃ராஹ்மணரே! அத்₄யவஸாயமில்லாவிடில் அந்தப் பர வஸ்துவை அடையமாட்டான்.]

104. ஸ்தோத்ரரத்னம்-60.

105. ஆஸீநா வா ஶயாநா வா திஷ்ட₂ந்தோ யத்ர குத்ர வா ।
நமோ நாராயணாயேதி மந்த்ரைகஶரணா வயம் ॥

[எங்காவது உட்கார்ந்திருந்தாலும், படுத்துக்கொண்டிருந் தாலும், நின்றுகொண்டிருந்தாலும் 'நமோ நாராயணாய' என்னும் திருமந்திரத்தையே உபாயமாகப் பற்றியவர்கள் நாங்கள்.]

---

99. தை-ஆன-5. 101. சா₂ந் 3-14-2. 103. பா₄ர-ஶாந்தி 334-47. 105. நாரதீ₃யம்.

106. ப்ரமாணத்திற்கு மூலத்தைப் பார்க்கவும்.

[ஸகிகளே! அவர்களுடைய தியானம் இடைவிடாமலிருப்பதற்காக, என்னிடம் பக்தி செய்யும் ஜந்துக்களை நான் அடைவதில்லை. பெண்களே! பணமற்றவன் அடைந்த பணத்தை இழந்தவுடன் அந்த நினைவினால் பூர்ணனாய் வேறொன்றையும் எப்படி நினைக்கிறதில்லையோ, அப்படியே எனக்காக லோகத்தையும், வேதத்தையும், உடைமைகளையும் விட்டவர்களான உங்களுக்கு என்னிடத்தில் தியானமுண்டாவதற்காக, கண்முன்னால் காட்சியளித்த நான் மறைந்தேன். பிரியைகளே! (என்னிடத்தில்) அதற்காக அஸூயை கொள்ளலாகாது. கபடமில்லாமல் என்னுடன் கூடிய உங்களுக்கு நன்றாக ப்ரத்யுபகாரம் செய்ய தேவர்களின் ஆயுட்காலத்திலும் நான் ஶக்தனல்லன். விடவொண்ணாததான க்ருஹமென்னும் விலங்கை வெட்டிவிட்டு என்னை அடைந்த உங்களுக்கு, அந்த விலங்கு மறுபடியும் இப்போது கழலட்டும். (ஸம்ஸாரமாகிய விலங்கைக் கழற்றுகையே நான் உங்களுக்குச் செய்யும் கைம்மாறு என்று தாத்பர்யம்.)]

107. ஸ்தோ-ப்ர (295)

108. ,, (78)

109&110 ,, (288)

111. ,, (25)

112. ,, (204)

113. ஸாக்ஷாத் தேவ: புராணோऽஸௌ

[பழமையானவனான இவனே நிருபாதிகதேவன்.]

ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே ஶரணம்.

---

106. பாகவதம் 10-32-21,22,23 க்ருஷ்ணவாக்யம்.

ஸ்தோத்ரரத்ந ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யானங்களிலுள்ள ப்ரமாணங்களுக்கு அகராதி3 க்ரமத்தில் அனுக்ரமணிகை (அட்டவணை)

• இக்குறியிட்டவைகளை ஜிதந்தே வ்யாக்யான ப்ரமாணத் திரட்டில் பார்க்கவும்.